Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542



அதிருத்ர மகாயக்ஞம் ஓயாமடம்

அண்ணாமலையில் கலசங்கள் ஊர்வலமாக...



# ரமணோதயம்

ஜூலை 2011
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ரூ. 20/



## ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பத்து ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ “Ramanodhayam” என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்
சென்னை

நோக்கியே கருதி மெய்தாக்கியே பக்குவம்
ஆக்கி நீ ஆண்டருள் அருணாசலா!



SRIVARI VARALAKSHMI
CHITS PVT LTD
31/8, I FLOOR,
KARPOORA STREET
PERIAMET
CHENNAI 600 003

Phone: 9003017379
24612747

உதயம் 10 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2011

ஆசிரியர்:
Dr. S. ராம் மோஹன்

இணை ஆசிரியர்:
தியாகராஜன்

ஆலோசகர்கள்: ஏ.வி. சுப்ரமணியன், ஜா.ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டுச் சந்தா : ரூ. 75 தனி பிரதி : ரூ. 20

காசோலை/மணியார்டர் ரமண கேந்திரா டிரஸ்ட் என்ற பெயரில் எடுத்து 20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:
குமார் ராஜா : 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
A. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்,
20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2011


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | செவியமுதம் | வஸந்தா ராகவன் | 19 |
| 3 | ரிபு கீதை | தியாகராஜன் | 27 |
| 4 | நான் யார் தெரியுமா? துவக்கம் முதல் நான் யார் வரை | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 32 |
| 5 | ரிபு கீதை | தியாகராஜன் | 27 |
| 6 | சிவானந்த லஹரி | கௌதமன் | 39 |
| 7 | இனிவரும் திருநாட்கள் | | 43 |
| 8 | ரமணரின் இந்திரா | பாமதி மைந்தன் | 45 |
| 9 | வாழ வழிகாட்டும் வடமொழி இலக்கியங்கள் | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 54 |
| 11 | பாலக்காட்டில் ஓர் பலாக்கொத்து | ஆகுரா | 66 |
| 12 | குரு நமஸ்காரம் | | 72 |
| 12 | செய்திகள் | | 73 |

## ஆசிரியர் உரை

# வெறுவெளி வீடு

அக்ஷரமணமாலை என்னும் அருட்காவியத்தில் 91 ஆவது பாடலில் பகவான் அழகாக உரைக்கிறார்

**ராப்பகலில்லா வெறு வெளி வீட்டில்**
**ரமித்திடுவோம் வா அருணாசலா!**

அக்ஷரமணமாலையின் எல்லாப் பாடல்களைப் போல இப்பாடலும் பதம் பதமாக உள்வாங்கி அநுபவிக்கத் தக்கது. ராப்பகல் அற்ற இடம், வெறுவெளி வீடு, ரமித்தல் என்று பரமார்த்த நிலையின் பல்வேறு நிலைகளைக் கூறும் எழில் மிக்க பாடலின் உட்பொருள் ஆழமிக்கது.

குறிக்கோளற்ற வாழ்வு பயனற்ற வாழ்வு, பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதை மார்பில் மேலனாய்க் கழிந்த நாளும், வருபிணி மூப்பு வந்து கோலனாய்க் கழிந்த நாளும், குறிக்கோள் இலாது கெட்டேன் என்று பாலப்பருவம், யௌவனப் பருவம், முதுமை ஆகிய எந்தப் பருவத்திலுமே ஆன்மிகக் குறிக்கோள் இல்லாது வாழ்வை வீணடித்ததாகப் பாடுகிறார். நம்முடைய இந்த வாழ்வு இறப்பில் முடிந்துவிடும். ஆயினும், நம் வாழ்வின் அம்சங்கள் வாசனைத் தொகுதிகளாக அடுத்த பிறவிகளிலும் தொடரும். உடல் சம்பந்தபட்டு செய்கின்ற முயற்சிகள்

உடலுடன் போய் விடும். விரலில் போட்டுக் கொள்ளும் மோதிரம் விரல் அறுபட்டால் பயனற்றுப் போவது போல், உடல் சம்பந்தமான பயிற்சிகள் உடலுடன் போய்விடும். நம் உள்ளுணர்வைச் செம்மைப் படுத்தினால் அது மற்ற பிறவிகளிலும் தொடர்ந்து நம்மை ஆன்மிக முயற்சியில் தொடரச் செய்யும். மூச்சு விடுவது போல இடையறாது ஆன்மிகப் பயிற்சியில் ஈடுபட்டால் உள்ளுணர்வு செம்மைப்படும். அப்போது இவ்வுடல் இருக்கும்போதே கூட வீடு பேற்றை அடையலாம். அப்படி அடைபவர்களையே ஜீவன் முக்தர் என்கிறோம். சங்க நூலாகிய பத்துப் பாட்டில் தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாது அதன் பயன் எய்திய அளவை மான என்று வருகிறது. தவம் செய்யும் ஞானிகள், தம் உடலை விடுவதற்கு முன்பே ஜீவன் முக்த நிலையை அடைந்துவிடுவர் என்று சங்க நூல் கூறுகிறது.

அத்ர ப்ரஹ்ம ஸமஸ்துதே அம்ருத இஹபவதி என்று உபநிடதங்கள் இதனையே குறிப்பிடுகின்றன. உடலுடன் இருக்கும் போதே இறையுடன் ஒன்றுவதற்கு வழி என்ன என்பதைப் பகவான் கூறுகிறார்.

நம்முடைய வழக்கமான நிலை என்ன! நம் எல்லோர் உள்ளேயும் ஆன்மிக தாகம் வெவ்வேறு ஆழத்தில் இருப்பது உண்மை. ஆன்மிகச் சொற்பொழிவுகளைக் கேட்கும் போதும், பகவான் போன்ற ஞானத் தபோதனர் நூல்களைப் படிக்கும் போதும் உலகத்தில் உள்ள நினைவு மாறி எங்கேயோ போய் நிற்பது போன்ற உணர்வு எழுகிறது. உடம்பு கனத்தை இழந்து, ஆன்மிக வானில் சிறகடித்துப் பறப்பது போன்ற உணர்வு உண்டாகிறது. சத்சங்கத்தில் இறைவன் பேரருளைப் பற்றி சொல்லும் போது உள்ளம் நெகிழ்கிறது. மேலும், மேலும் அந்த நிலையிலேயே இருக்க வேண்டும் என எண்ணுகிறோம்.

ஆனால் அதைக் கேட்டு வெளியே வந்தபோது, பிரபஞ்சச் சேற்றில் உழலும் போது, மீண்டும் பழைய குருடி, கதவைத் திறடி என ஆகிறோம்.

இதனின்று முன்னேற வேண்டுமெனில் மஹான்களின், பெரியோர்களின் இணக்கத்தைத் தேடி அதில் இருக்க வேண்டும். நம் உள்ளம் பக்குவமடைந்து தெய்வீக நிலையை அடைய வேண்டும் என்ற தீவிர ஆசை எழும். அந்த ஆசை முறுக, முறுக சிரத்தை வலுப்பெற, வலுப்பெற நம்முடைய சாதனையிலும் முன்னேற்றம் ஏற்படும். சோதனைகட்கு இடையே நம் சாதனை வெற்றி பெறும். நமக்கும் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையே நம் முயற்சிக்கு முதல்படி. நம்முடைய முயற்சி ஒரு பகுதி, அநுபவம் மற்றொரு பகுதி, முயற்சி இல்லாமல் அநுபவம் வராது. முயற்சிகளில் முக்கியமானது சத்சங்கத்தைச் சார்வது. நாம் யாருடன் சேர்கின்றோமோ, அதற்கு ஏற்றபடி உள்ளத்தில் நினைவுகள் உருவாகும். இறைவன் அருள் பெற்றவரோடு சேர்வது, நாமும் அருளநுபவம் பெறத் தூண்டுகோலாய் இருக்கும்.

கல்வி, கேள்வி, என்று கூறுவார்கள். கல்வியானது உயர்ந்த நால்களைப் படிப்பது. அது நமது ஆன்மிக முயற்சிக்கு நிச்சயம் உதவி செய்யும். அதனின்றும் ஆன்மிக அநுபவம், ஞானம் பெற்றவர்களுடன் நேரில் சந்திப்பது நமது சந்தேகங்களை உடனடியாக நீக்கும் வல்லமை படைத்தது. கி.வா.ஜ கூறுவது போல், நூல்களைப் படித்து அறிவு பெறுவது முன்பு போட்டு வைத்த அவரைக்காய் வற்றலைக் கொண்டு கூட்டு செய்வது போலாகும்! அதற்கும் சுவை உண்டுதான். ஆயினும் ஆன்மிக அநுபவம் மிக்கவர்களுடன் நேரில் கலந்துரையாடும் சத்தங்க அநுபவம், பச்சைக் காய்கறிகளைப் பறித்து வைத்து சமைப்பது போல் சுவை மிக்கதாகவும் பயன் அதிகமாகவும் இருக்கும். ஔவையார் இதையே கேள்வி முயல் என்கிறார்.

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் என்று கூறப்படும். கேள்வி முயல் என்றால் என்ன காதில் விழுவது எல்லாம் செவிச் செல்வம் ஆகாது. காதில் ஒலி விழுவதால் மட்டும் பயன் இல்லை. நல் விஷயங்களைக் கேட்டு, அதன் பொருளை உள்வாங்கி நாம் பரிணாமம் அடைய வேண்டும்; அது தான் செவிச் செல்வம். கற்க வேண்டும், நலம் தருகின்ற உபதேசங்களைக் கேட்க வேண்டும், அப்போது கேட்ட உபதேசங்களின் பொருளை மனதில் சிந்தித்து தெளிய வேண்டும். பின்னர் அதனையே தியானிக்க வேண்டும். நம்முடைய லட்சியம் என்ன என்பதை தெளிவாக வரையறுத்து அதனை அடைய உறுதுணையாக இருப்பதையே கற்று,

கேட்டு, சிந்தித்து, தெளிந்து, தியானிக்க வேண்டும். கற்றுத் தெளிந்தவனுக்கு ஆன்மிக முயற்சி செய்யும் தீவிர ஆர்வம் ஏற்படும். அந்த ஆர்வத்தினால் சாதனை வலுவடையும். சாதனை வலுவடைய வலுவடைய, நம்மை வழிகாட்டும் குருநாதன் தானே வந்து ஆட்கொள்வான்.

சாதனையின் முக்கிய நிலை மனத்தை அழிப்பதே. ஆயினும், மனம் அழிய விரும்பாமல் நம்மைப் பல வழிகளிலும் ஏமாற்ற முற்படும். ஒர் உயரிய ஞானி கூறுவது நமக்கு அறிவு அளவில் விளங்குமானால் நாமும் மிக முன்னேற்றமடைந்து விட்டதாக எண்ணிக் கொண்டு, அவரை ஒத்த நிலையில் இருப்பதாக எண்ணுகிறோம். இதுவே நம்மை ஏமாற்றும் மனத்தின் யுக்தி. நம்மைச் சுற்றிய பலர் அந்த மாய வலையில் சிக்கி, சாதனை தடைபட்டு போவதைக் காண்கிறோம். எனவே, கேட்டு, சிந்தித்து, தெளிவு அடைந்து, தியானிக்க வேண்டும். இதற்குத் தேவை மனத்தனிமை. வீதியில் பல பொருட்களை வாங்கி, தெருத் தெருவாக விற்கும் வியாபாரி, அதன் மூலம் ஈட்டுவதை வீதியில் பல பேர் முன்னிலையில்

எண்ணுவதில்லை. தனியே வீட்டில் போய் எண்ணுகிறான். அது போல கல்வி, கேள்வி, போன்றவை அறிஞர்களாலும், சத்சங்கங்களாலும் நிறைந்த அளவில் பெற்றாலும், அதனைத் தனியே இருந்து தியானித்தால்தான், ஆன்மிகப் பயன் சித்திக்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒர் அழகிய உவமை கூறுவார். பாலைத் தயிராக்க பானையில் பாலையில் பிறை இட்டபின், அதனை அசைக்காமல் தனியே வைக்க வேண்டும். அது முழு அளவில் தயிராவதற்கு முன் அசைத்துக் கொண்டு இருந்தால் தயிராகாது. அது முழுவதும் தயிரான பின்னர், எவ்வளவு அசைத்தாலும், தயிராகவே இருக்கும். அது போல, உயர்ந்த ஆன்மிக விஷயங்களை உள்வாங்கி, தனிமையில் மனம் அசைவுறாமல், தியானிக்க வேண்டும் அப்போது தான் இறையருள் கூடப் பெறும். அந்த சாட்சாத்காரம் வந்து எய்திய பின்னர், எத்தகைய சூழ்நிலையிலும் அது மாறாமல் இருக்கும் மனத்தின் இயக்கத்தை நிறுத்துமாறு, நாம் தேடாமலே நம்மை வந்து அடைந்த பெருநிதியான சத்குருவை வேண்ட வேண்டும்.

**தேடாது உற்றநல் திருவருள் நிதியம், அகத்து**
**இயக்கம் தீர்த்துஅருள் அருணாசலா!**

என்பது அக்ஷரமணமாலையில் பகவானின் வாக்கு.

அருளாளர்கட்கு மனம் நடுநிலையில் இருக்கும். அலையற்ற கடல்போல் அமைதியாக இருக்கும். ஒரு கலைஞன் உச்சஸ்தாயியில் பாடினாலும் கீழ் ஸ்தாயியில் பாடினாலும், எப்படிப் பாடினாலும் அவன் பாட்டு ஆதாரஸ்ருதியுடன் ஒட்டி நிற்கும். ஆரோஹணம், அவரோஹணம் இரண்டிற்கும் பொதுவாய் ஓடிக் கொண்டிருக்கும் இந்த ஸ்ருதி ஞானிகள் மனதில் எப்பொழுதும் ஆதாரஸ்ருதி போல இறையுணர்வு - தான்



உணர்வு இருந்து கொண்டே இருக்கும். எந்தச் செயலைச் செய்து கொண்டு இருந்தாலும் மனம் அந்நிலையிலிருந்து மாறுவதே இல்லை. தான் மதுரையில் ஆன்ம விழிப்பு பெற்றபின், தான் தொடர்ந்து இருந்த நிலையைக் குறிப்பிடும்போது பகவான், நான் எந்தச் செயலைச் செய்து கொண்டு இருந்தாலும் ஆழ்மனதில் நான் என்ற தன்னுணர்வு இடையறா ஆதார ஸ்ருதி போல் ஓடிக் கொண்டிருந்தது எனக் குறிப்பிடுகிறார்.

அந்த நிலையையே சமநிலை என்று கூறுகிறோம்.

**எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும்**
**முத்தர் மனமிருக்கும் மோனத்தே - மெத்தனமாய்க்**
**காதி விளையாடி இருகை வீசி வந்தாலும்**
**தாதி மனம் நீர்க் குடத்தே தான்.**

என்கிற பாடல் கிராமத்தில் நீர் எடுத்து வரும் பெண்கள், தலைமேல் ஒரு குடமும், அதன் மேல் ஒரு பாத்திரமும், இடுப்பில் ஒரு பானையில் நீர் நிரப்பி எடுத்துக் கொண்டு வருவார்கள். கையை வீசிக் கொண்டும் ஊர்க் கதையை எல்லாம் பேசிக் கொண்டும் வருவார்கள். என்னதான்

பேசிக் கொண்டு வந்தாலும் தலையில் இருக்கும் குடத்தை மறந்து விட மாட்டார்கள். அது கீழே விழுந்து விடாதபடி நடுநிலையில் இருப்பார்கள். ஞானிகளும் அது போன்றே எச்செயல் செய்து வந்தாலும் அவர்தம் மனம் ஆத்ம நிஷ்டையிலிருந்து பிறழாமல் இருக்கும். வெறுவெளி வீட்டில் தனிமைப் பிரதிஷ்டையில் இருக்கும்.

வெறுவெளி வீட்டில் ஒன்றுவதற்கு தியானம், ஜபம், பூஜை என்ன வழிமுறைகள். மற்ற எண்ணங்களை முற்றிலும் நீக்கி, ஆத்மாவில் அல்லது நாம் தியானிக்கும் இறைவனில் மனம் ஒன்ற வேண்டும். எதைத் தியானிக்க வேண்டும் என்று திண்டாடும் நம் மனதிற்கு, இதோ! இதைத் தியானிப்பாய் என்று அக்ஷரமணமாலையில் உள்ள ஒவ்வொரு மலராலும் அடையாளம் சொல்லிக் காட்டுகிறார் பகவான்.

சிறிய குழந்தைக்குக் காது குத்துவதைப் பார்த்திருக்கிறீர்கள். குழந்தைக்குக் காது குத்தும் முன்னர் பொற்கொல்லர் முதலில் குங்குமத்தால், காது குத்தும் இடத்தில் அடையாளம் செய்து கொள்வார். அது போல, இறைவனின் திருவடிகளில் அக்ஷரமணமாலை மலரினை இட்டு, அதையே அடையாளமாக இறைவனிடம் மனத்தை ஈடுபடுத்த வேண்டும். பின்னர் மனமே இன்றி தியானம் செய்யும் நிலை கைகூடும்.

கையால் செய்கின்ற பூசையை விட மனத்தால் செய்யும் பூசனையே உயர்ந்தது. சிவோஹம், அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று நாம் செய்கின்ற ஆன்மிகத் தியான வழிபாட்டினால் பாவபலம் பெருக்குகிறோம். அது நம்மை மனம் கடந்த நிலைக்கு, ராப்பகலில்லா வெறுவெளிக்குக் கொண்டு செல்கின்றது.


தனிமையில் மனம் ஒருமித்துச் செய்யப்படும் **பா**வ தியானத்தால் **பா**வனையையும் கடந்து செல்கிறோம்.

***பாவபலத்தினால் பாவனாதீத சத்***
***பாவத்திருத்தலே உந்திபற***
***பரபத்தி தத்துவம் உந்திபற!***

***(உபதேச உந்தியார்)***

*என்பது பகவான் உபதேசம்*

*பாரதத்தில் ஒரு கதை வருகிறது. அர்ஜுனன் பாசுபத அஸ்திரம் வேண்டிக் கைலாசம் சென்று கொண்டு இருக்கிறான். வழியில் சிவபெருமானுக்குப் பூஜை செய்யப்பட்ட பத்திர புஷ்பங்களாகிய நிர்மால்யத்தை சிவ கணத்தினர் வண்டி வண்டியாக எடுத்துச் செல்வதைக் காண்கிறான். இவை என்ன என்ற அர்ஜுனன் கேள்விக்கு, இவையாவும் நிர்மால்யம். ஒரு சிறந்த பக்தன் சிவ பெருமானைப் பூஜை செய்தவை என்று விடை தந்தனர். இத்தனை புஷ்பங்களையும் பத்திரங்களையும் கொண்டு ஒரு பக்தன் தினம் பூஜை செய்கிறானா, யார் அந்த பக்தன்? என்று வியப்புடன் கேட்டான் அர்ஜுனன். பூலோகத்தில் உள்ள உத்தமனாகிய தர்மபுத்திரனின் தம்பியாகிய சி வபக்த திலகமாகிய வீமன்தான் தினம் இவ்வளவு பூக்களைக் கொண்டு பூஜை செய்கிறான் என்று பதில் கிடைத்தது. அதைக் கேட்ட அர்ஜுனனுக்கு ஆச்சர்யம் ஏற்பட்டது. நம் அண்ணன் தினம் ஏராளமாகச் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறோம் அதில் அவனுக்கு யாருமே நிகர் இல்லை. ஆனால், அவன் பூஜை செய்தே நாம் பார்த்ததில்லையே! ஒருவேளை நாம் ஊரில் இல்லாதபோது பூஜை செய்ய ஆரம்பித்திருக்கலாம், இதுவே இவ்வளவு இருந்தால், நாம் தினம், தினம் ஆண்டாண்டு காலமாக சிவபூஜை செய்து வருகிறோமே, அந்த நிர்மால்யம் இங்கே இமயமலைபோல் குவிந்திருக்க வேண்டுமே என்று எண்ணினான். அந்த மலர்மலை எங்கே இருக்கிறது என்று அறியும் ஆவல் வந்து, வீமனுடைய தம்பி அர்ஜுனனும் தினமும் பூஜை செய்து*



வருகின்றேனே அந்த நிர்மால்யத்தை எங்கே கொட்டி வைத்துள்ளீர்கள்? என்ற வினவினான்.

பதில் வந்தது: அதுவ, அது ஒரு குடலையில் பாதி கூட இல்லையே! அதை எப்போதோ கொண்டு போய்க் கொட்டி விட்டோம்! இந்த வீமன் மலர் மலைதான் எடுக்க எடுக்க மாளவில்லை.

அர்ஜுனனுக்கு தான் உயர்ந்த சிவபக்தன் என்ற அஹங்காரம் அடிபட்டது. பீமசேனன் இத்தனை நிர்மால்யம் குவியும்படி எப்போது பூஜை செய்கிறார்? இவ்வளவு நிர்மால்யம் சேர்ந்துள்ளதே? என்று கேட்டான். அதுவா! மற்றவர்கள் எல்லாரும் நந்தவனத்தில் பூ பறித்து பூஜை செய்வார்கள். பீமசேனன் நந்தவனத்தையே அர்ச்சனை செய்து விடுகிறார் என்றன சிவகணங்கள். புரியவில்லையே! அது எப்படி என்றான் அர்ஜுனன். நந்தவனத்தில் மலர் பூத்துக்குலுங்கும்

ஒரு மரத்தைப் பார்க்கும் போது கண்ணை மூடிக் கொண்டு அத்தனை மலர்களையும் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்வதாக ஆழ்ந்த **பா**வனை செய்வான். கணநேரத்தில் அத்தனை மலர்களும் இங்கே நிர்மால்யமாகிவிடும். மற்றவர்கள் பூஜை செய்யும்போது, அவர்கள் கரங்கள் இடைவிடாமல் மலர் எடுத்து பூஜை செய்தாலும் அவர்கள் ஆழ்மனதில் இறை எண்ணம் இருப்பது மிகச் சிறிய நேரமே. மற்ற நிமிடங்களில் அவர்கள் மனம் அலைபாய்ந்து கொண்டு இருக்கும். ஆனால் பீமசேனன் செய்யும் மானஸீக பூஜையோ ஆறு-நெய் வீழ்ச்சி போல் உள்ளம் இடையறாது கடவுள் **பா**வனையில் ஈடுபட்டுள்ளது. எனவே, அவர் கண்ணில் பட்டதெல்லாம் நிர்மால்யம் ஆகிவிடுகின்றன என்றது சிவகணம். இதைக் கேட்ட அர்ஜுனன் அஹங்காரம் அழிந்து போய், மனம் ஒன்றிச் செய்யும் தியானத்தின் **பா**வ பலத்தை அறிந்து கொள்கிறான்.

இறைவழிபாடு என்றால் வெறும் பூசைகளாலும், சடங்குகளாலும் மட்டும் அல்ல. அனைத்துக்கும் மூலகாரணமான மூலப் பொருளுடன், காதல் பித்தேறி அதனுடன் உறவாடி இரண்டறக் கலக்கும் வகையில் அதையே நினைந்து, நினைந்து உருகிக் கசிந்து கண்ணீர் மல்கி கரைவதே இறை வழிபாடு. ஒரு காதலனும் காதலியும் கண நேரப் பிரிவைக் கூடத் தாள முடியாமல் வாடுகின்றனர் அல்லவா! அதே போன்ற பிரிவாற்றாமையை தாங்காத காதல் பெருக்குடன், அப்பெருங்காதலனாம் இறைவனுடன் முழுமனதுடன் முயலும்போது, காதல் போயின் சாதல் என்ற அளவுக்கு பித்தேறிக் கிடக்கும் போது, அக்காதலில் வெற்றியே கிட்டும். இப்பெருங்காதலில் தாங்கள் பெற்ற வெற்றியே தேனூறும் கவிதைகளாய் ஞானியரும் பக்தரும் நமக்கு விட்டுச் சென்று உள்ளனர்.

***நீ நான் அறப்புலி நிதங்களி மயமாய்***
***நின்று நிலை அருள் அருணாசலா!***

*என்று நீயும், நானும் அற்ற அத்வைதப் பெரு நிலையில் ஜுவநாயகியும், பரநாயகனும் ஒன்றும் நிலையைப் பாடுகிறார் பகவான்.*

*அன்றொரு நாள் கண்ணனைக் கண்டு மயங்கிய கோதை செல்வியைப் போல் கீதாஞ்சலியில் தாகூர் பாடுகிறார். காதலியின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் நிரம்புகிறது. இதுவரை வாழ்வில் தலைவனைத் பிரிந்து இருந்ததால் ஏற்பட்ட துயரமெல்லாம் ஒன்று சேர்ந்து அந்த மனத்திற்கினியவனைப் பற்றிய செவிக்கினிய இசையாக மாறி வெளிவருகிறது. துன்பமே இல்லாத இன்பமே உருவான ஒரு பறவை, அகண்டமான கடலைத் தாண்டிப் பறந்து செல்வதுபோல் அவளது சிந்தனையும் சிறகடித்துப் பறக்கிறது. தன் இதய கீதத்தால் மெள்ள மெள்ள நாயகனின் அருகில் நெருங்கி அவனைத் தொடப் பார்க்கிறா, தொட்டும் விட்டாள். ஆஹா, என்ன ஆனந்தம்! அந்த ஆனந்தசாகரத்திலே மூழ்கி, அவனை உரிமை கொண்டாடி நண்பா என அழைக்கிறாள் (கீதாஞ்சலி - 2) அந்த நாயகனின் இதய ஒலியாகி, அந்த நாதத்தில் ஐக்கியமானவரின் நாயகியின் இதய ஒலி எப்படி தனித்து ஒலிக்க முடியும்! அது,*

**இதயமாம் குகையின் நாப்பண்**
**ஏகமாம் பிரம்ம மாத்ரமாய்**

*ஒன்றுகிறது. நாம் பிரபஞ்சம் அனைத்துமாய ஒன்றாய் உணர்கிறோம். இதுவே ராப்பகல் இல்லா பெறுவெளியில் ரமிக்கும் உயர்நிலை.*

*கல்வி கேள்வி, சிந்தித்தல், தியானித்தல் ஆகிய படிகளையெல்லாம் பயின்று கடந்து, தனிமையில் இறைவனுடனே ஒன்றும் நிலையைப் பேண வேண்டும். அப்போது அவன் நம்மை நாடி வருவான். நாயகனான அவன், நாயகியாகிய நம்மைச் சந்திக்கும் இணைப்பு, தனி உரிமை கொண்டது.*

***ராப்பகலில்லா வெறு வெளி வீட்டில்***
***ரமித்திடுவோம் வா அருணாசலா!***

என ரமண நாயகி அழைப்பு விடுக்கிறாள்.

வெறுவெளி என்றால் யாதுமற்ற இடம். யாதும் இல்லாத இடம் என்றால், இறைவன் இல்லாத இடம் அன்று, அவன் இல்லாத இடமே இல்லையே! ஆயினும் அவனைத் தனியே சந்திக்க வேண்டும் என்று தலைவி தலைப்படுகிறாள். ஒரு தலைவனைத் தலைவி, நாலு பேருடன் சேர்ந்து போய்ப் பார்த்தால், நாலு பேருக்கு நடுவில் இருக்கிறானே என்று அயலாள் போலதான் பழகுவாள். அவனுடன் முற்றும் பேரின்பம் பெற அவனைத் தனியே சந்திக்கவேண்டும். அதுபோலதான் நாமும், நம்முன் பிறவிதொறும் கூடவே வருகின்ற வாசனைகளை விட்டு விட்டு, தனியே செல்ல இயலாமையால்தான் அவன் அளிக்கும் பேரின்பத்தைப் பெற முடியவில்லை.

இறைவனைச் சந்தித்து ஒன்றாக வேண்டுமெனில் தனியாகச் செல்ல வேண்டும். தலைவன் பரந்த வெளியில் ஆனந்தமாய் இருக்கிறான், தலைவியோ கோட்டைக்குள் இருக்கிறாள். பூட்டிய கோட்டைகளையும், அதைச் சூழ்ந்த ஆழ்ந்த பாலம் அற்ற ஆழியும் அவளை வெளியே சென்று தலைவனைச் சந்திக்க விடாமல் தடுக்கின்றன. இந்தக் கோட்டைச் சுவரை இடித்து, அகழியைத் தகர்க்க வேண்டும். இவை இரண்டும் யான்-தான் என்ற இரண்டும். கெட்டாலின்றி யாவர்க்கும் தோன்றாது சத்தியம், தொல்லைப் பெரும் நிலம் நகரமாய் நின்றான் மருகன் க்ருபாகரன் கேள்வியினால் சான்றிடும் அற்ற தனி வெளிக்கே வந்து சந்திப்பதே. யான்-தான் என்ற இரண்டு சொற்கள் வரும் போது அவை வெவ்வேறானவை என்ற த்வைதப் பொருள் தோன்றும். யான்-தான் என்னும் பொருளை இரண்டும் உண்மையில் கெடுவது இல்லை. யான் என்பது

அஹங்காரம், தன் முனைப்பு. தான் என்பது உள்ளே உயிர்த்துடிப்பாய் எப்போதும் நிலை பெற்ற ஆத்மா.

**தானே தானே தத்துவம் அதனைத்**
**தானே காட்டுவாய் அருணாசலா!**

யான் என்பது கெட்டு, தானுடன் ஒன்றாக வேண்டும். அந்த அத்வைத நிலையில் நான் என்று சொல்வதற்கும் யாருமே இல்லை- சுத்த மௌனமாம் சுவாநுபவ நிலை எங்கே பேச்சு நிற்கிறதோ அதுவே அநுபவ நிலை.

ஒருவனுக்கு, ஒரு வைத்யன் சிகிச்சை செய்யும் போது மயக்க மருந்து கொடுத்த பின்னர், உணர்வு நிலை போய் விட்டதா என்பதை அறிய, நோயாளியை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணச் சொல்வார். அப்படிச் சொல்லிக் கொண்டு வரும் போது அவன் எப்பொழுது எண்ணுவதை நிறுத்தி விடுகிறானோ! அவனுக்கு அப்போது மனமடங்கி மயக்க நிலை வந்து விட்டது என்று வைத்தியர் அறிந்து கொள்கிறார். சொல்லடங்கும் போது மனமும் அடங்குகிறது. இதுவே சுத்த மௌன நிலை. யான்-தான் என்று பேதத்தைச் சுட்டிக் காட்டும், சொற்கள் எப்போது நிற்குமோ, அப்போது அத்வைத அநுபவம் சித்திக்கிறது. பேத உணர்வு உள்ள வரை சத்யம் தோன்றாது. சொற்களைத் தாண்டிய இந்த அபேத உணர்வையே தனி வெளிக்கே வந்து சந்திப்பதே என அருணகிரியார் கூறுகிறார்.

**ராப்பகலில்லா வெறு வெளி வீட்டில்**
**ரமித்திடுவோம் வா அருணாசலா!**

என்று பகவான் இதனையே குறிப்பிடுகிறார். வெறு வெளி என்பது ஞானவெளியாகிய சிதாகாசம் இதயவெளி. அங்கே சென்று அவனைச் சந்தித்து அவனுடன் ஒன்றாய் ரமிக்க வேண்டும். அந்த வெறு வெளிநிலை முக்திநிலை, வீடு பேறு. இது தேச காலங்களை, இரவு பகல்கள் நன்மை-தீமை ஆகிய த்வைதங்களைக் கடந்த நிலை. அந்த வெறு வெளியில் தனியாக இருக்கும் ஒன்றலில் நாம் எங்கே

உலகபந்தங்களிலிருந்து விடுபட்டு மனம் அற்று இருக்கிறோமோ, அங்கே, அந்த வெறு வெளி கிடைக்கிறது. யான்-தான் என்ற இரண்டும் அற்ற வெறு வெளி என்று குறிப்பிடும் பகவான் ஆத்மசாட்சாத்கார ப்ரகரணம் 29 ஆவது பாடலில் இதனைப் பாழ் என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

நம்மாழ்வாரும் இந்த வெறு வெளியை,

**அத்தனையும் வெறும் பாழே, ஓ!**

என்று திருவாய்மொழியில் குறிப்பிடுகிறார்.

ராப்பகலில்லா வெறுவெளி வீட்டில் ரமிக்க அருணாசலன், பற்றுகள் அறுத்த நம்மை அணுகுகிறான். அப்போது

**ஏகபோகமாய் நீயும் நானுமாய்**
**இறுகும் வகை பரமசுகம் அதனை அருள்!**

என்று அபேத நிலையில் ஒன்று படுகிறோம்.

அப்போது அந்த வெறு வெளி கீழ்மேல் எங்கும் கிளர் ஒளி ஆக எங்கும் பரவிப் படர்ந்து, நானாகிய என்னை விழுங்கித் தானாய் நிலை நிற்கும் தற்பரம் ஆகின்றது.

அந்தத் தனிவெளியில் இறைவனைச் சந்தித்து ஒன்றாகலாம். அது சான்று யாரும் இல்லாத தனிவெளி. நமக்கு இப்போது சரீரம் பொறி புலன்கள், பஞ்சேந்திரியங்கள் அனைத்தும் உடன் இருக்கின்றன. இவை நமக்குச் சாட்சியாய் வெளியே இருக்கின்றன. இவை ஆண்டவனை மறைக்கின்றன. அவையற்ற பாழிடந்தான் வெறுவெளி. அதை மறைக்கும் புறச் சான்றுகளை நீக்கி, அகச் சாட்சியாக நிற்கும் பரமனை நாடி நம் உள்ளே செல்ல வேண்டும் அந்த இடத்தில் நாமும், அவனும் மட்டுமே ஒன்றாக இருப்போம். இதை அலங்காரத்தின் மற்றொரு பாடலும் கூறுகிறது.

***ஒளியில் விளைந்த உயர் ஞான பூதரத்து உச்சியின் மேல்***
***அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியிலே***
***வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறும்தனியைத்***
***தெளிய விளம்பியவா! முகமாறுடைத் தேசிகனே!***

*யான், நீ, தான் என்ற மூன்று சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொற்கள். யான் என்ற தன்முனைப்பு, அஹங்காரம் இம்மூன்றும் தனித்தனியே தோன்றும் நிலை கெடும். தான் என்ற ஆத்மா ஒன்றே நிலை நிற்கும். அப்போது அந்தத் தானை,*

***யானாகிய என்னை விழுங்கி வெறும்***
***தானாய் நிலை நின்றது தத்பரமே!***

*என்று இந்த நிலையைக் கந்தர் அநுபூதி கூறுகிறது.*

*ராப்பகலில்லா வெறு வெளி வீட்டில் பகவானை நாடிச் செல்வது எப்படி? எந்த விதமான எதிர்பார்ப்புகளோ, ஆசைகளோ இல்லாமல் நிர்வாண மனத்துடன் சத் குருவிடம் செல்லுங்கள். இலைகளை எல்லாம் உதிர்த்து விட்ட மரம் போல செல்லுங்கள் அப்போது மட்டுமே, அப்போதுதான் உங்கள் மனம் உருவாக்கும் உருவெளித் தோற்றங்களைப் பார்க்காமல் தனிவெளியை அடைவீர்கள். அப்போது தான் பரத்திலிருந்து பகவானின், அருட்பார்வை உங்களை ஊடுருவுவதை உணர்வீர்கள். வெறு வெளியில் உள்ள பேருண்மை நேரடியாக உங்களைச் சுத்த மனதிற்குள் புகட்டும். நீங்கள் ஒரு பார்வையாளராக, அகச் சாட்சியில் மட்டும் இருங்கள். மனதைக் கழற்றி வைத்து விடுங்கள். பகவானிடம் அன்பர் கேட்டார், பகவானே தங்கள் அருள் எனக்கு எப்போது கிடைக்கும்? பகவான் பதில் கூறினார். அருள் எப்போதுமே இடைவிடாமல் பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது. நீர் குறுக்கே வராமல் இருந்தால் போதும்! மனம்தான் தடை, பகவானின் அருளை உள்ளன்புடன் வேண்டுங்கள். தீவிர சாதனையுடன், மனத்தைக் கழற்ற முனையுங்கள். ஆரம்பத்தில், சில*

விநாடிப் பொழுதுதான் இந்தப் பேரூண்மை அநுபவம் ஏற்படும். ஆனால் அந்தச் சில விநாடிகளே ஒரு புதிய பரிமாணத்தைப் புலப்படுத்திவிடும். சில விநாடி நேரம் மனம் செயலற்றுப் போனால் சட்டென ஒரு மின்னல் வெட்டுத் தோன்றும். அந்தச் சிறு பொழுதில் மனப் பிரபஞ்சம் மாயாமாய் மறைந்துவிடும்.

பேருண்மை பளிச்சென்று புலப்படும். ஆரம்பத்தில் இது மின்னல் போல் தோன்றி மறைந்தாலும், அப்புறம் படிபடியாக மனமற்ற நிலை வெறுவெளி வீட்டில் உங்களுக்குள் வந்து படிந்து நிலை கொண்டுவிடும். அதன் பின் மின்னல்கள் தேவையில்லை. ஞானக் கதிரவன் உதித்து இருள் அகன்று விடும். இதுவரை வாழ்ந்தது உலக வாழ்வு. இனி வாழப் போவது ஆன்மிக வாழ்வு. இதுவரை வாழ்ந்தது எண்ணங்களின், மனதின் வாழ்வு. அது முடிந்து ராப்பகலில்லா வெறு வெளி வீட்டில் புகுந்து விட்டோம். இது வரை நீங்கள் வெளியே, வெளியே போய்க் கொண்டிருந்தீர்கள். இனி உள்ளே உள்ளே பின்னே திரும்புகிறீர்கள். உள்முகமாகப் பயணம் செய்கிறீர்கள். புதிய இருப்புணர்வு புலப்படுகிறது. இதைத்தான் மறுபிறவி என்கிறோமோ? முதற் பிறவி பெற்றோர் கொடுத்த பருப்பிறவி. புதுப் பிறவி நீங்கள் எடுத்துக் கொண்டது. இதுதான் உண்மையான பிறவி. நம் சொந்த ஆன்மிகக் கருப்பையிலிருந்து நம்மை நாமே பிரசவித்துக் கொண்டு, இருபிறப்பாளராகிறோம். அப்போது ஒரு புதிய பரிமாணம் திறந்து கொள்கிறது. ஆசானிடம் விடையைத் தேடி வினாவுடன் செல்லும் போது, அந்த வினாவையே அவர் அழித்து விடுகிறார்.

பகவான் பணியில் தங்கள்,

**ராம் மோஹன்**

# செவியமுதம்

**வஸந்தா ராகவன்**

இம்முறை எனக்கு ஏற்பட்ட வித்தியாசமான இரண்டு அநுபவங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது, விரைவாக அலுவலகம் செல்ல ஒரு ஆட்டோவில் ஏறி, அலுவலகம் சென்றடைவதைப் பற்றியே எண்ணிக் கொண்டு இருக்கும் போது முன்னே சென்ற ஆட்டோவில் தோன்றிய அண்ணாமலையார், உண்ணாமுலையம்மன் உருவம் பதித்த ஸ்டிக்கர் தென்பட்டது. உடனே மனம் மிக லேசாக, சந்தோஷம் மெல்லத் தலை தூக்கியது. அந்த ஆட்டோ வேகமாக சென்றவுடன் பிம்பமும் மறைந்துவிட்டது. சிக்னலில் வண்டி நிற்க மீண்டும் அதே கோணத்தில் சூரிய ஒளிபட்டு அதே ஆட்டோவில் கடவுளர் உருவம் பதித்த ஸ்டிக்கர். செல்லும் இடம் சிறிது தூரமே ஆகையால் அலுவலகம் வந்தவுடன் இறங்கி ஓட்டுனரிடம் பணத்தை கொடுத்து விட்டுத் திரும்பினால் முன் சென்ற ஆட்டோவில் கண்டது நான் பயணித்த வண்டியிலேயே! முன் சென்ற வண்டியில் நிழற்படமென்னுரை ஒட்டப்பட்டதால் அருகே இருக்கும் பிம்பம் தொலைவில் காணப்படுவது போன்ற பிரமை. இது எப்படி இருக்கிறது என்றால், உள்ளே உறையும் பரம்பொருளை நாம் வெளியே தேடுவது போல தான்.

இந்த இரண்டு நிகழ்வுகளுமே மனித மனத்தின் கற்பனையினால் விளைந்த கேலிகூத்துதான். அறிஞர் ஒருவர் கூறுவது போல மனித மனம் எங்குக் கோலோச்ச வில்லையோ அங்குப் பிரதானமாக இருப்பது அழுக்காறுகள் அற்ற தூய இதயம்.

இரண்டாவது ஒரு மலைவாசஸ்தலத்திற்குச் செல்ல நேரிட்டது. அதே இடத்திற்கு பல வருடத்திற்கு முன் சென்றுள்ளேன். அப்போது அங்குள்ள ஒரு மலை குகை கோவிலுக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. இயற்கை அழகை ரசித்துக் கொண்டு செல்லும் வேளையில், உடன் வந்திருந்த ஒருவர் நாங்கள் பார்க்கப் போகும் கோவிலைப் பற்றிச் சொல்கையில், அந்த கோவிலில் கடவுளை தரிசிக்க வேண்டுமாயின் தவழ்ந்து தான் செல்ல வேண்டும், சிறிது தலையை உயர்த்தினால் கூட தலை குகையின் மேல் இடிக்கும், இப்படியாக 100 Metre அளவாவது சென்றால் தான் கடவுளைத் தரிசிக்க இயலும் என்றெல்லாம் கூறினார். அதனால் மனதில் ஒரு வித கற்பனையில் தயக்கம் ஏற்பட்டு கோவிலைப் பார்க்காமல் கூட திரும்பி விட்டேன்.

ஆனால் இம்முறை செல்லும்போது ஒரு தீர்மானத்துடனே ஒரு கனமான நிறமுடைய ஆடையை அணிந்து சென்றேன். (தவழ்ந்து சென்றால் ஆடை அழுக்காகி விடுமே!) கோவிலை நெருங்கி சென்று காண்கையில், என் மனக் கற்பனையிலிருந்த ஒரு இருண்ட குகை, மிகச் சிறிதே ஆன ஒரு வாயில், அதில் நாம் மண்டியிட்டு, மூச்சு திணற உள்ளே செல்லும் காட்சி, இப்படி ஒன்றுமே இல்லை. சிறிது தலைதாழ்ந்து உள்ளே செல்லப் போதிய வெளிச்சத்துடன் கூடிய குகை, உள்ளே கடவுளர்களின் திவ்ய தரிசனம். யாரோ சொல்லிய வார்த்தை ஏற்படுத்திய மனப் பீதியை பாருங்கள்!

இந்த இரண்டு நிகழ்வுகளுமே உண்மையை அறிந்து கொள்ள தைரியமில்லா ஒரு மனித மனத்தின் கற்பனையால் விளைந்த கேலிகூத்துத்தான். அறிஞர் ஒருவர் கூறுவது போல மனித மனம் எங்குக் கோலோச்ச வில்லையோ அங்குப் பிரதானமாக இருப்பது அழுக்காறுகள் ஏதுமற்ற தூய இதயம். எங்கு மனம் ஆட்சி

செலுத்துகிறதோ அங்கு இதயம் களங்கப்படுகிறது. மனமானது, தூசு எவ்வாறு கண்ணாடியில் படிந்துள்ளதோ அது போல எண்ணங்கள் தருகிற களிம்பு இதயத்தில் படிந்திருக்கிறது. மனம் என்பது எண்ணங்களின் தூசு. ஒவ்வொரு எண்ணமும் தூசியின் படிவமே. நம் ஆசிரியர் பலமுறை வலியுறுத்துவதுபோல் அறையை சுத்தம் செய்வதுபோல் எண்ணங்களையும் சுத்தப் படுத்தினால் தான் நாம் தூய்மை அடைய முடியும்.

இன்னொன்றும் உண்டு, ஒருவன் புறத்தே ஒழுக்கமாக இருப்பதினால் மட்டும் தூய்மையானவனாக விளங்குவான் என்று நிச்சயமில்லை. தூய இதயம் ஒழுக்கமானதுதான். ஆனால் ஒரு புற ஒழுக்கமான மனிதன் அகத் தூய்மையானவனாக இருப்பான் என்பதற்கில்லை. ஏனெனில், புற ஒழுக்கமானவன் எப்பொழுதும் அறிவைச் சார்ந்தே உள்ளான். அவனது ஒழுக்கமானது அறிவைச் சார்ந்தே உள்ளது. அறிவு என்றும் தூய்மைக்கு வழியாகாது. ஏனெனில் தூய்மை சூழ்ச்சிகள் அற்றது, ஆனால் அறிவு என்பது சூழ்ச்சிகளையும் அரவணைத்தே நிற்பது. இந்த அகந்தை என்னும் அறிவு நம்மைக் கொண்டு செல்வது எங்கே?

அகத்திலே தூய்மை இல்லாது புறத்தில் மட்டுமே தூய்மையும், அழகும் கொண்டு இருப்பவனை புறச்சுவர் கோலம் செய்பவர்கள் - வீட்டின் உள்ளே அழுக்கை வைத்துக் கொண்டு வெளிச் சுவரில் வண்ணமா பூசி அழகுபடுத்துவது போல என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் கேலி செய்கிறார். அவர்கள் இறுதியில் புற அழகெல்லாம் நீங்கி பறவைகள் வந்து தம் உடலைக் கொத்துமாறு வீழ்ந்து கிடப்பார்கள். எனவே, புறத்தூய்மை விடுத்து, அகத் தூய்மையையும் அழகினையும் மேம்படுத்துங்கள் என அறிவுறுத்துகிறார்.

**மறம்சுவர் மதில் எடுத்து, மறுமைக்கே வெறுமை பூண்டு**
**புறம்சுவர் ஓட்டை மாடம் புரளும் போது அறிய மாட்டீர்**
**அறம்சுவர் ஆகி நின்றஅரங்கனார்க்கு ஆட் செய்யாதே**
**புறஞ்சுவர்க் கோலஞ் செய்து புள்கௌவக் கிடக்கின்றீரே!**

பகவான் உள்ளது நாற்பதில் கூறியது போல,

**உலகுண்மை யாகு முணர்வில்லார்க் குள்ளார்க்**
**குலகளவா முண்மை யுணரார்க் - குலகினுக்**
**காதார மாயுருவற் றாருமுணர்ந் தாருண்மை**
**யீதாகும் பேதமிவர்க் கெண்**

அறிந்தவர்க்கும் சரி, அறியாதவர்க்கும் சரி, உலகம் சத்தியமேயாகும். ஆயின் உண்மையை அறியாதவனுக்கு உலகின் அளவு அவன் நினைக்கின்ற அளவேயாகும். ஏனென்றால் அவன் அங்கு அறிவைச் சார்ந்தவன். அறிவு தரும் அகங்காரத்தில் அவனுக்கு உண்மை புலப்படாமல் போகிறது. எவ்வளவோ பேசியும், எழுதியும் வார்த்தை ஜாலங்களால் புரிந்து கொண்டதைப் போன்று நடித்துக் கொண்டும், மேலும், மேலும் களிம்பேற்றிக் கொள்கிறானேயன்றி, உண்மையை உணர்கிறான் இல்லை. ஆனால் உணர்ந்தவனோ தூய்மையான இதயத்தில் உலகத்திற்கு ஆதாரமாய் சுயமின்றி பிரகாசிக்கும் ஸத்யத்தை உணர்ந்தவனாகின்றான்.

இதுகாறும், நாம் தூய்மையைப் பற்றியும், ஒழுக்கத்தைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தோம், இப்போது அது நினைவு படுத்தும், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய, திருடன் ஒருவன் ஒழுங்குசீலனாக வேடமணிந்து பின் உண்மையிலேயே உயர்ந்த கதையையும், குரு-சிஷ்யர்களான வெங்கடரமணய்யா, தியாகராஜரின் குரு-சிஷ்ய உறவின் ஒழுங்கும்-சிரத்தையும் நினைவிற்கு வருகிறது.

காசி மாநகரில் திருடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு முறை அவன் திருடுவதற்காக புறப்பட்டான். ஆனால்

மாலை நேரம் முழுதாகக் கடக்காததால் அவன் நன்றாக விபூதி பூசி ருத்திராட்சம் அணிந்து கங்கை நதிக்கரையின் ஓரமாகத் தீவிர ஜபத்தில் ஈடுபட்டிருப்பது போல நடித்துக் கொண்டிருந்தான்.

அந்த எழில்மிகு காசி மாநகரை, காசிராஜன் சிறப்புடன் ஆண்டு வந்து கொண்டிருந்தான். அவனுக்கு அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். காசிராஜனும் சரி, இளவரசியும் சரி, மிக்க தெய்வ பக்தி கொண்டவர்கள். சாதுக்களைப் பேணுவதிலும் மிக்க சிரத்தை உடையவர்கள். அன்று வழக்கம் போல காசி ராஜன் நகர் உலா வந்து கொண்டிருந்தான். திருடன் தவம் செய்து கொண்டிருக்கும் பக்கமாக வந்த காசிராஜன், இளையவன் ஒருவன் தீவிர தவம் இயற்றிக் கொண்டிருப்பதைக் கண்டார். உண்மையிலேயே அவன் தவக்கோலம் பூண்டிருக்கும் சாதகன் என்று நம்பிய காசிராஜன், அத்தகைய தவசீலருக்கு தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்க நாட்டம் கொண்டான். கண் திறந்து பார்த்த திருடனை வணங்கிய காசிராஜன், தன் உளநாட்டத்தை திருடனிடம் கூறினார். அப்படி ஒரு நிகழ்ச்சியை எதிர்பார்க்காத திருடன் விதிர்விதிர்த்துப் போனான். ராஜனிடம் உண்மையைக் கூற எண்ணி, தான் பொய்யாக அப்படி ஒரு வேடம் அணிந்துக் கொண்டதாகவும், தான் ராஜன் எண்ணும் அளவிற்கு ஒன்று நல்லவன் அல்ல என்றும் கூறினான். ஆனால் ராஜனோ, நல்லவர்கள் தங்களை எப்போதும் நல்லவர்கள் என்று பறைசாற்றமாட்டார்கள் என்பதைக் கூறி, தன் மகளுக்கே திருடனைத் திருமணம் செய்து வைத்தார். திருடனும் தனக்கு வந்த வாழ்வை எண்ணி மகிழ்ந்தான். நல்லவன் போல் வேடம் அணிந்ததற்கே இத்துணை நன்மை தனக்கு ஏற்பட்டதென்றால், உண்மையிலேயே நல்லவனாக ஆனால் எத்துணை நன்மைகள் ஏற்படும் என்று எண்ணி, உண்மையை



உணர்ந்தான். அது முதற்கொண்டு அவன் தன் மனதின் தீய எண்ணங்களை போக்கி நல்லதே செய்து, நலம் பெற்றான்.

இக்கதையில் திருடன் சிறிது நேரம் ஒழுக்கமானாகத் திகழ்ந்து அதனால் தனக்கு ஏற்பட்ட நன்மையினால் அறிவைக் கொண்டு எட்டாத உண்மையை கண்டு கொண்டு தூய்மையானவன் ஆனான். இதனை **பா**வபலம் எனப் பகவான் கூறுகிறார்.

சில நூறு வருடங்களுக்கு முன்னால் இந்தியாவின் தென்னகத்தில் வாழ்ந்தவர் சொண்டி வெங்கடரமணய்யா. சரபோஜி மன்னரின் சபையில் பிரதான கர்நாடக இசைக் கலைஞரானஇவர், பலசிஷ்யர்களையும் கொண்டிருந்தார். ஆறு வயதேயான பிரம்மஞானி தியாகராஜரும் அவ் வூரிலேயே வாழ்ந்து வந்தார். அவர் நிதமும் கோவிலுக்குச் செல்கையில், சொண்டி வெங்கடரமணய்யா அவர்களின் வீட்டைக் கடந்தே செல்வார். அப்பொழு தெல்லாம்

*சொண்டி வெங்கடரமணய்யா தன் சீடர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் இசையைக் காது கொடுத்துக் கேட்பார். ஒரு முறை சொண்டி வெங்கடரமணய்யா தன் சீடர்களிடம் ஒரு கடினமான இசையைப் பற்றிய கேள்வி கேட்டார். ஆனால் அங்கு உள்ள சீடர்களால் அவரின் கேள்விக்கு பதில் அளிக்க முடியவில்லை. வெளியே நின்று கொண்டிருந்த தியாகராஜர் ஒரு குழந்தையின் குதூகலத்துடன் சரியான விடையை உரக்கச் சொன்னார். அதனால் மிகவும் மகிழ்வுற்ற சொண்டி வெங்கட ரமணய்யாவும் தியாகராஜரைத் தன் சீடராக ஏற்று அவருக்கு முறையான பயிற்சி அளித்தார்.*

*சில வருடங்கள் கடந்தது. இன்னும் சிறுவனாகவே விளங்கும் தியாகராஜரை, சரபோஜி மன்னரின் சபையில் சொண்டி வெங்கடரமணய்யா பாடச் சொன்னார். குருவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்த தியாகராஜரும் உடனே தொரக்குணா இடுவண்டி சேவா.......(குருவின் முன்னால் பாடுகின்ற ஆசி இது போல் யாருக்கு கிட்டும், எந்த தேவர்களுக்கும் இது கூடாத ஒன்று, அத்தகைய ஆசி எனக்கு அருளப்பெற்றதற்கு நான் என்ன பாக்கியம் செய்தேன்) என்று பொருள்பட பாடினார். சொண்டி வெங்கடரமணய்யாவும் தொரக்குணா இடுவண்டி சிஷ்யுடு.......(இத்தகைய அருமையான சிஷ்யன் யாருக்கு வாய்ப்பான்) என்று அன்புடன் பாடினார்.*

*இந்த நிகழ்வு ஒரு குருவிற்கும், சிஷ்யனுக்கும் இடையே உள்ள அன்பையும், சிரத்தையையும் காட்டுகிறது. எந்த ஒன்றை அறிந்து கொள்வதற்கும் நமக்கு சிரத்தை தேவை. அந்த சிரத்தையும் ஒழுங்குடன் அமைந்திருக்க வேண்டும்.*

*இங்கே பாருங்கள்! தியாகராஜரின் ஒழுக்கத்துடன் கூடிய சிரத்தை அவரை பிரம்மஞானி என்ற நிலைக்கு உயர்த்திச் சென்றதை!*

ஒழுக்கமானது சிரத்தையுடன் கூடியிருக்கும் போது, அது புல்லறிவைச் சார்ந்திருப்பதில்லை. பௌதீக அறிவைச் சார்ந்த ஒழுக்கம் தூய்மைக்கு இட்டுச் செல்லாது. ஆனால் சிரத்துடன் கூடிய ஒழுக்கமோ உன்னைத் தூய்மையின் பாதையில் இட்டுச்செல்லும். அப்போது அகங்காரமானது மெல்ல மெல்ல மறைந்து ஒரு புதிய பரிமாணத்தில் நீ ஜனிப்பாய். உன் புறநோக்கு, அக நோக்காய் மலர்ந்து நீ புதிய புதிய உயரங்களை அடைவாய். இந்தப் பரிமாணத்தில் நீ செய்கின்ற மற்றும் சொல்கின்ற அனைத்தும் பரிபூரணமானதாக ஒளிரும்.

# ரமணேசன்

***சுப்பையா***

***தன்னையறிந்து தானாயிருக்கும் தானாய் ஒளிர்பவனே!***
***முன்னைவினை முழுதகன்று முடிமணியாய் உள்ளோனே!***
***என்னை எனக்கறிவித்த எம்பிரானே என்ரமணேசா !***
***உன்னையன்றி யான்வேறோ உணர்திடவே வந்தருள்வாயே!***

***கம்பீரக் கண்ணோக்கம் கருணைபொழி அருணைஒளி***
***நம்பினோரை நயந்து நலம் தரு நாயகனாம்***
***சும்மா இரு சுகம் பெறுவாய்! - என்று மொழிந்து***
***வெம்மை பரித்துயர் வென்று முற்றறுத்தவனே!***

# ரிபு கீதை

## தியாகராஜன்

*ரிபு கீதை 10/10*

***அன்னமய கோசமிலா தான்மரூப***
***மமர்பிராண கோசமிலா தான்மரூப***
***மின்னுமனோ கோசமிலா தான்மரூபம்***
***விஞ்ஞான கோசமிலா தான்மரூபர்***
***துன்றுசுக கோசமிலா தான்மரூபம்***
***பின்னமுறா வான்மாவுக் கயலேயில்லை***
***பிரிவெனவே காண்பவெல்லா மான்ம ரூபம்***

*(உள் நாற். பாடல் 5 -லக்ஷ்மண சர்மா)*

அன்னமய கோசம், மானோமயம், அது அன்னத்தினால், அதாவது உணவினால் அமைவதால் அப்பெயர் பெற்றது. இதற்கும் மனோமய கோசத்திற்கும் இடையிலுள்ள பிராணமய கோசம் அவ்விரண்டையும் ஒன்றோடொன்று சேர்த்து வைப்பது. இந்த இரண்டாவது கோசத்தில் கன்மேந்திரியங்கள் அடங்கும். மூன்றாவது மனோமய கோசத்தில் ஸங்கற்ப, விகற்பங்கள், ஆசை முதலிய வாசனைகள் எல்லாம் அடங்கும். விஞ்ஞானமய கோச த்தில் புத்தி, அகங்காரம், ஞானேந்திரியங்கள் அடங்கும். ஆனந்தமய கோசம், அஞ்ஞானமயம், மற்ற நான்கும் ஒய்ந்த தூக்கத்தில் இது மட்டும் மிஞ்சும், தூக்கம் சுகமாயிருப்பதால் இது ஆனந்த மயமெனப்படும். தூக்கத்தில் இது மிஞ்சுவதால் தான், தூக்கத்தினின்று விழித்தும் முன்போல் அகங்காராதி எல்லாமும் கிளம்பு, ஸம்ஸார பந்தம் அனுபவிக்கப்படுகிறது. அகங்காரம் எல்லாமும்தூக்கத்தில்ஆனந்தமயத்தில்அதிநுட்பவுருவாய் வித்துப் போல அடங்கிக் கிடக்கும், மறுபடி கர்மபலத்தால் முளைத்தெழும். அதாவது ஆனந்த மயம் மட்டில் மிச்சமாயுள்ள தூக்கத்தினின்று யாரும் முக்தி என்னும்

ஞான அனுபவத்தை பெறுவது கிடையாது. விழித்திருக்கும் போதே விஞ்ஞான மயத்தில் உள்ள சுகங்காரத்தை ஆன்ம விசாரமென்னும் ஸாதனத்தால் நசிப்பித்து நேராக முக்தி என்னும் ஞான நிலை பெற வேண்டும்.

(அனு தினமும் ஸ்ரீ பகவானுடன் - பக் 355-356).

பகவான் விவேக சூடாமணியிலிருந்து 244,245,246 ஆம் பாடல்களை மேற்கோள் காட்டி, உரைத்தார். சீடன் நான் ஐந்து கோசங்களையும் அனாத்மா என்று களைந்தபின் ஒன்றுமே மிஞ்சவில்லை என்று காண்கின்றேன். அதற்கு குரு பதில் சொல்கிறார். ஆன்மா, அல்லது எந்த வஸ்து அனைத்தையும் (அகந்தையையும் அதன் சிருஷ்டி களையும்) அவை இல்லாமையையும் (சூனியத்தையும்) காண்கிறதோ, அது எப்போதும் உள்ளது.

தொடர்ந்து பகவான் அருளினார், ஆன்மா அல்லது நான் என்பதில் இயல்பு ஒளியாகத்தான் இருக்க வேண்டும். எல்லா மாற்றங்களையும் சூன்யத்தையும் பார்க்கிறாய், எப்பசிடிவேறொன்றிலிருந்து ஒளியைப் பெற்றாய் என்றால், அவர் எப்படிப் பெற்றார் என்ற கேள்வி எழும், சங்கிலித் தொடர் போன்ற அந்த வாதத்திற்கு எல்லையே இருக்காது. அதனால் உனக்கு நீயேதான் ஒளி. இதற்கு வழக்கமாகச் சொல்லும் உபமானம், எத்தனையோ பொருள்களைச் சேர்த்துப் பலவிதமான உருவங்களில் இனிப்புப் பதார்த்தங்கள் செய்யப்படுகின்றன, அவை அனைத்தும் இனிப்பாய் இருப்பதற்குக் காரணம் அவை அனைத்திலும் சர்க்கரை இருப்பது தான். ஏனெனில் இனிப்பு சர்க்கரையின் இயற்கையான குணம். அதைப் போலவே, எல்லா அனுபவங்களும், அவை இல்லாமையையயும், ஒளியை உள்ளடக்கியவை. ஏனெனில் ஒளி ஆன்மாவின் குணம். எப்படி ஒரு பொருளும் சர்க்கரை இன்றி இனிக்காதோ அது போல, ஆன்மா இன்றி அவை அனுபவிக்கப்பட மாட்டா.

சிறிது பொறுத்து பகவான் பின் வருமாறு அருளினார், முதலில் ஒருவன் ஆன்மாவைப் பிற பொருளாக பார்க்கிறான். பின்னர் ஆன்மாவை சூன்யமாகவும், பிறகு ஆன்மாவை ஆன்மாவாகவும் காண்கின்றான், கடைசி நிலை மட்டும் காண்பது என்பது இல்லை, ஏனெனில் காண்பது என்பது அதுவாகவே இருப்பது

(அருணா-அஷ்-2)

**கண்டவன் எவன் எனக் கருத்தினுள் நாடக்**
**கண்டவன் இன்றிட நின்றது கண்டேன்**

(அனுதினமும் பக்கம் 257-58)

அருணாசல பஞ்சரத்னத்தில் 5வது பாடலில் எல்லாவற்றிலும் உன்னைக் கண்டு எல்லாமும் உன் உருவாய் என்று வருகிறதே, அந்த உன் உரு, எந்த உருவைக் குறிக்கிறது ? என்று கேட்டார், பம்பாயைச் சேர்ந்த திருமதி நானாவதி, அதற்கு பகவான் பின் வருமாறு அருளினார்: அப்பாடலின் பொருள், மனதைப் பரிபூரணமாக சரணடையச் செய்து உண்முகமாக்கி உன்னுள்ள இருக்கும் நான் என்னும் ஆன்மாவை காண். பின்னர் உன்னில் இருக்கும் ஆன்மாவை எல்லாவற்றிலும் பார். உள்ளிருக்கும் ஆன்மாவைக் கண்ட பின்னரே அனைத்திலும் ஆன்மாவைக் காணமுடியும். ஆன்மாவைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்றும், தானே அந்த ஆன்மா என்பதையும் உணர வேண்டும். அதன் பிறகு தான் அனைத்தையும் ஆன்மாவின் உருவமாகப் பார்க்க முடியும்.

(திருவருண் மொழி - 49)

எப்போதும் ஓரியலாய் இருப்பதே உண்மை என்னும் ஸத்தியத்தின் லக்ஷணத்தோடு விசாரணை தொடங்குகிறது.

உலகமோ ஓயாது மாறுவதும் மறைவதுமாயிருக்கிறது. ஆகவே, அது அசத்தியமெனத் தள்ளப்படுகிறது. உண்மை



*இதுவன்று எனத் தள்ளிக் கொண்டு போய், தள்ளவுங் கொள்ளவும் இயலாத தன்னையே ஒருவன் முடிவில் காண்கிறான். இருப்பது தான் ஒன்றே, தனக்கயல் எதுவுமில்லை எனத் தெளிகிறான். அசத்யமெனத் தள்ளப்பட்டதும் தனக்கு அயல் அன்று எனத் தெரிகிறது. தனக்கோர் தனியிருப்பின்றிய உலகும் ஸத்ய ஸ்வரூபமாகவே தான் இருக்கிறது. அனுபவத்தில் இருப்பதைப் போன்றே, ஏகம் ஸத், அதையன்றி வேறொன்றும் இல்லை*

*(திருவருண் மொழி - 133)*

*சீதையின் நிகரற்ற கற்புச் சிறப்பை ரிஷிபத்னிகள் சோதித்துப் பார்த்ததாக ஒரு கதை சொல்லப்படும். ரிஷிகள் பலரிடையே ஸ்ரீராமனும் தன் வடிவை மறைத்து ஒரு ரிஷி வேஷத்தோடு நிற்க, ரிஷி பத்னிகள், அவர்களுக்குள் தன் பதி யாரென்று கண்டு பிடிக்கும்படி சீதையைக் கேட்டுக்*

கொண்டனர். சீதை ரிஷிகளை ஒவ்வொருவராகப் பார்த்து, பார்த்து இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டே வந்து, ரிஷி வேடத்தில் நின்ற தன் பதியைக் கண்டதும் மௌனமாய் தலை குனிந்து நின்றாள். சீதையின் மௌனம் உண்மையைச் சிறப்புற உரைத்தது. அவ்வாறே வேதங்கள், தத்துவங்களை ஆய்ந்து, ஆய்ந்து, அல்ல, அல்ல (நேதி-ந-இதி) என்று புறக்கணித்துக் கொண்டே சென்று ஓரிடத்தில் மேலே ஒன்றும் சொல்வதற்கின்றி மௌனமாய் நிற்கின்றன. அதுவே, உண்மை நிலை. மௌனத்தால் உண்மையை விளக்குவதன் தாத்பரியம் இதுவே. விசாரணை விருத்தியால் பிற விருத்திகள் யாவும் விலக்கப்பட்டு விலக்குவதற்கு மேலே ஒன்றுமில்லா நிலையில், அவ்விருத்திகள் தன் மூலமாம் ஸ்வரூபத்தில் ஒடுங்க, ஸ்வரூபமே மிஞ்சி நிற்கிறது. என்றுமுள்ள ஏக பரிபூரண அஹம் ஸ்வரூபம் அதுவே. பாவனா தீதமாம் பரம்பொருள் அதுவே. உரை கடந்ததோர் அனுபவஸ்வரூபம்.

*(ரமண விருந்து -79)*

*மார்கழிமாதப் பனி, கடுங்குளிர். கௌபீனதாரியாக பகவான் தரிசனம் தர ஹாலில் அமர்ந்திருந்தார். ஒரு அன்பர் மிகவும் இரக்கப்பட்டுக் கூறினார், பகவானே! குளிர் கடுமையாக இருக்கிறதே வெஸ்ட் கோட் ஒன்றை அணிந்து போர்த்திக் கொண்டு உட்காரலாமே! புன்முறுவலுடன் பகவான் கூறினார், நீர் என்ன சொல்கிறீர்? பாவம்! இந்த ஆத்மா முதலிலேயே கனத்த ஐந்து போர்வைகளால் (கோசங்கள்) மூடப்பட்டுத் தவித்து அவஸ்தைப் படுகிறது. நீர், மேலும் இரண்டு போர்வைகளைச் சேர்த்துக் கொள்ளச் சொல்கிறீரே! சற்றாவது இரக்கம் காட்டக் கூடாதா?*

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

## பகுதி -9

### டாக்டர்.ஏ.வி.ராஜகோபாலன்

உபநிஷதக் கருத்துகள் உன்னதமானவை. அவை சாதாரணமான எண்ணங்கள், அபிலாஷைகள் உடைய சேதனர்களுக்குச் சற்றுப் புரியாத புதிராக அமைகின்றன. நான் யார் என்ற கேள்வி, எல்லோரையும் கவருவதில்லை. அதற்கான மனோ பக்குவம். மற்றும் அநுபவம் உடைய மாந்தருக்கே அத்தகைய சிந்தனை எழுகிறது. ரமண பகவான் மேலான உபநிஷத கருத்துகள் எல்லாவற்றிற்கும் ஒரு சிறந்த நுழைவாயிலாக இந்தக் கேள்வியை அமைத்துள்ளார். இதற்குக் கணக்குப் பாடங்களில் வருவது போல, இது தான் விடை என்று எதுவும் கிடையாது. சாதகனின் ஆன்மீகப் பயணத்தில் அவன் பல நிலைகளில் இதன் பல்வேறு பரிமாணங்களை அறிகிறான்.

பல உபநிஷத வாக்கியங்கள் மூலமாக இதன் பொருளை அறிய முற்பட்டோம். இப்பகுதியில் ஈசாவாஸ்ய உபநிஷதத்தின் மூலம் இப்பயணத்தைத் தொடருவோம்.

### ஈசாவாஸ்ய உபநிஷதம்

இந்த உபநிஷத்து தத்யங் ஆதர்ணவர் என்ற மஹரிஷியால் படைக்கப்பட்டது. இந்த உபதேசம் உலக இச்சைகளிலிருந்து விடுபட்டு முமுக்ஷுவாக இருந்த தன்னுடைய மகனுக்காக ரிஷியால் சொல்லப்பட்டது. குரு-சிஷ்யன் ஆகிய இருவரும் பிரம்ம நிஷ்டையில்

ஈடுபட்டவர்கள். ஆதலால் இது அர்த்த கௌரவம் உடையதாக அமையப் பெற்றுள்ளது. கதை வடிவமாக அமையாமல், இந்நூல் முழுவதுமே உபதேச வடிவமாக அமைந்துள்ளது. மொத்தம் 18 ஸ்லோகங்கள் இதில் உள்ளன. இந்நூல் ஈஸாவாஸ்யம் என்ற பதத்துடன் ஆரம்பிப்பதால் இந்த உபநிஷத்தும் அப்பெயராலேயே வழங்கப்படுகிறது. இது சுக்ல யஜுர் வேதத்தைச் சார்ந்தது.

இதன் முதல் ஸ்லோகம் பிரசித்தி பெற்றது.

**ஈசாவாஸ்யமிதம் சர்வம்**
**யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்।**
**தேன த்யத்த்தேன புஞ்ஜீதா**
**மாக்ருத தஸ்யஸ்வித் தனம்।।**

எங்கும் நிறைந்தவன் ஈசன். மற்ற தோற்றங்கள் எல்லாம் பொய்யானவை. குலசேகர ஆழ்வார் இவ்வுலகை மெய்யில் வாழ்க்கை என்றே உதறி தள்ளினார். இங்கு ஈச னைத் தவிர வேறு பற்று ஒன்றுமில்லை. சுந்தரமூர்த்தி நாயனார் மற்றுப் பற்று எனக்கின்றி நின் திருப் பாதமே மனம் பாவித்தேன் என்று அருளினார். அவனே உள்ளும் புறமும் எங்கும் நிறைந்திருப்பவன்.

**அந்தர் பஹிஸ்ச தத்சர்வம் வியாப்ய**
**நாராயணஸ்தித:**

**(மஹாநாராயண உபநிஷத்)**

என்று வேதமும் இயம்பியது. பக்திமார்கமாகப் பார்க்குமிடத்தும் இது பொருத்தமாக அமைகிறது. வேதாந்த வடிவத்தில் பார்க்கும்கால் இது அத்வைத சித்தாந்தமாகிறது. ஜகத்தை மித்யை என்று உதறும் மனப்பாங்கு சிலருக்கே கூடும்.

இந்த முதல் சுலோகத்தின் இரண்டாம் பகுதி, தேன த்யத்த்தேன புஞ்ஜீதா: என்ற ஆழமான கருத்தை வலியுறுத்துகிறது.

**த்யக்தேன - தியாக உணர்வுடன்**
**புஞ்ஜீதா: - அநுவபிப்பாயாக**

இவ்விரண்டும் முரண்பாடான கருத்தைச் சொல்வது போல் தோன்றும். எதை விட வேண்டும்? உடைமை என்று எதையெல்லாம் நாம் கருதுகிறோமோ, அவற்றையெல்லாம் விட வேண்டும். இது பல விதமாக விவரிக்கப்படுகிறது. முக்கியமான தியாகம் பலத்யாகம் (பலனில் எண்ணத்தை விடுதல்) இதுவே கீதையின் சாரம். செயலின் பலனில் நாட்டமுடையவர்கள்,(கிருபணா: பல ஹேதவ:) அதனால் அர்ச்சுனா, நீ பலனில் கருத்தை செலுத்தாதே. (மா கர்ம பல ஹேதுர் பூ:). ஆனால் செயலாற்றாமலும் இருக்காதே (மாதே சங்கோஸ்த் வகர்மணி), என்பது கீதாசாரியனின் வாக்கு.

செயலின் பலன் என்பதை பூர்வர்கள் ஸ்தூலம், சூக்ஷ்மம் என்று இரண்டு வடிவமாகக் கொள்ளுவர். ஸ்தூல பலன் என்பது கண்ணெதிரில் காணக் கூடிய பலன். இது பொருள், புகழ், ஆரோக்கியம், வசதி என்ற குறியீடுகளில் அடங்கும். இந்தப் பலனில் நாட்டம் கொள்ளாது இருப்பதே கர்ம யோகமாகும். சூக்ஷ்ம பலன் என்பது செயலின் மொத்தவடிவு. தத்தம் கடமையைச் செவ்வனே அனைவரும் செய்வதாலேயே சமுதாயம் என்ற சக்கரம் இயங்கும். இதுவே, சூக்ஷ்ம பலன். என் செயல், எனக்குப் பலன் தரும் என்று கருதாமல், என் கடன் பணி செய்து கிடப்பதே! என்ற **பா**வத்தில் செயலாற்றுவதே சிறந்த மனோபாவம்.

**கர்மணைவ ஹி சம்சுத்திம்**
**ஆஸ்திதா ஜனகாதய:**

**(கீதை)**

இரண்டாம் தியாகம் மமதா தியாகம் மம என்ற சொல்லுக்கு என்னுடைய என்ற பொருள். இதன் வெளிப்பாடே மமகாரம். பல பாவங்களுக்கும் அடிப்படை

இந்த மமதையே. இதையே இன்னும் விரிவாக்கி இந்தக் கர்மம் எனக்காக அன்று, இது ஈஸ்வரார்பணம் என்று கருமத்தைச் செய்யும் மனப்பாங்கே மமதா தியாகம். இதுவும், பலனைவிட்டு செயலில் ஈடுபடுவதும் ஒன்றோடொன்று இயைந்த செயல்பாடுகள்.

மூன்றாவது தியாகம் கர்த்ருத்வ தியாகம். நான் செய்பவன் என்ற எண்ணத்தை விட்டு "I am not the doer", என்ற ரமணரின் நெறியில் நின்று ஒழுகுவதே இந்நிலை. நான் செய்பவன் இல்லை என்றால் வேறு ஏதோ ஒரு சக்தி செயலாற்றுகிறது என்ற பொருள் வருகிறது. அந்த ச க்திதான் பரம் பொருள்.

சுருக்கமாகப் பார்த்தால் தியாகம் என்பது

1. பலனில் ஆசை விடுதல் - பலத்தியாகம்

2. என்னுடையது என்ற கருத்தை விடுதல் - மமதா தியாகம்

3. நான் செய்கிறேன் என்ற எண்ணத்தை விடுதல் - கர்த்ருத்வ தியாகம்

தரும நியமப்படி செயலாற்ற வேண்டும், மூன்று வித தியாகங்களைச் செய்து செயலாற்ற வேண்டும், கிடைப்பதை வைத்துத் திருப்தியுடன் வாழ்தல் வேண்டும் என்பதே இந்த உபநிஷதக் கருத்து. இத்தகைய நிலையில் ஒரு சோகமயமான வாழ்வுதான் கிட்டும் என்று கருதுபவர்களுக்கு, நம்மாழ்வார் ஒரு அறிய கருத்தைச் சொல்லுகிறார்.

**உண்ணாஞ்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம்**
**கண்ணன், எம்பெருமான், என்று என்றே கண்கள் நீர் மல்கி**

சாதாரணவாழ்வில் சேதனன் செய்யும் நித்தியகருமாக்கள் உண்ணுதல், பருகுதல் போன்றவை. இவையெல்லா வற்றிற்கும் பரம் பொருளே உள்ளுறைப் பொருள் என்பது

ஆழ்வாரின் அநுபவம். இத்தகைய நிலையில் தியாகம் என்பது துக்கத்தில் ஆழ்த்தும் செயல் என்று இல்லாமல் தியாகத்தால் மகிழ்ந்து கண்கள் நீர் மல்கி இருத்தல் உயர்ந்த சாதக நிலை.

கர்த்தருத்வ தியாகத்திற்கு - நான் செயலாற்றுவோன் அன்று என்கிற நிலைக்கு - சிறந்த உதாரணம், நம்மாழ்வாரின் திருவாய்மொழியில்தான். கண்ணனையே தன் செயல்களுக்கு எல்லாம் காரணமாகக் கொண்ட ஆழ்வார், தன்னுடைய கவிபாடும் திறனுக்கும் அவனைக் காரணமாக்குவது இயற்கை. தன்னைத் தெரிந்து எடுத்த ஆண்டவன், தனக்கு இறைவன் பால் பாசுரம் எழுதும் பேற்றையும் அளித்தான் என்பர் ஆழ்வார்.

***ஆம்முதல்வன் இவன் என்று தன் தேற்றி, என்***<br>
***நாமுதல் வந்து புகுந்து, நல் இன்கவி***<br>
***தூ முதல் பக்தர்க்குத் தான் தன்னைச் சொன்ன, என்***<br>
***வாய் முதல் அப்பின என்று மறப்பனோ?***

ஆம்முதல்வன் என்ற இப்பாசுரம் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தில் பெரிதும் ஏற்றப்படுவது. பிரபத்தி என்னும் சரணாகதி தத்துவத்திற்கும் வேதாந்தத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை இத்தத்துவம் விளக்கும். இந்த நிலையில் பலத் தியாகமும், மமதா தியாகமும் கூட வெளிப்படுவது தெளிவு.

இத்தகைய உயரிய நிலை எப்படிக் கைகூடும்? உபநிஷத்து இதற்கு விடை சொல்லுகிறது.

***யஸ்து ஸர்வாணி பூதான் யாத்மன் யேவானு பஸ்யதி।***<br>
***சர்வபூதேஷு சாத்மானம் ததோ ந விஜுகுப்சதே।।***

***(ஈசாவாஸ்யம் 6)***

இத்தகைய தியாக உணர்வுகளை உடையவன், உலகில் படைப்புகளத்தனையும் ஆத்மாவினிடத்தில் பார்க்கிறான். ஆத்மாவை அனைத்துப் படைப்பிலும் பார்க்கிறான். அவன் எதையும் வெறுப்பதில்லை (நவிஜகுப்சதே).

இந்நிலையில் அவனுக்கு துக்கம், கலக்கம் என்ற நிலைகள் அற்றுப் போகின்றன. (தத்ர் கோ மோஹ:) அவன் அனைத்துப் படைப்புகளிலும் ஒற்றுமையைக் காண்கிறான் (ஏகத்வம் அநுபஸ்யத:).

பின்னர் இந்த உபநிஷத்து அவித்யை மற்றும் வித்யை என்ற இரண்டைப் பற்றி பேசுகிறது. அவித்யை கருமங்களைக் குறிக்கும். இதைப் பின்பற்றுபவன் பித்ரு லோகங்களை அடைகிறான். வித்யை என்பது தேவ லோகங்களை அளிக்கக் கூடியது. இந்த இரண்டு மார்க்கங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றினால் காரிருளில் அது தள்ளிவிடும் என்பது இந்த உபநிஷத்தின் சாரம்.

***அந்தம் தம: பிரவிசந்தி யே அவித்யாமுபாசதே।***
***ததோ பூய இவ தே தமோ ய உ வித்யாயாம் ரதா:।।***

***(ஈஸாவாச்யம் 9)***

இந்தக் கருத்து நம் வோதாந்த, தத்துவ உலகின் ரத்தினமாக உள்ளது. வித்யை அவித்யை என்பன கருமம், உபாசனை, போன்ற வெளிப்பாடுகளைக் குறிக்கும். இவற்றைப் பின்பற்றுபவனுக்கு பித்ரு லோகம், தேவலோகம் போன்ற நிலைகள் கிட்டும். இவை சிறந்த நிலைகள் என்றாலும் இவை தாற்காலிகமானவை. ஞானம் என்ற மனோபாவம் கொண்ட சாதகன் இந்தக் கரும் - உபாசனா நிலைகளில் இருந்தாலும் இதைத் தாண்டி முமுக்ஷுவாகிய நிலையை எய்துகிறான் (தேஷாம் ஞானி நித்ய யுக்த: ஏக பக்திர் விசிஷ்யதே! -- பகவத் கீதை)

இந்த உபநிஷத்தின் ஆரம்பத்திற்கு மீண்டும் செல்வோம். தியாக உணர்வு உடையவன், சுயநலமற்றவன். அனைத்துப் படைப்புகளிலும், அவன் பரம்பொருளை காண்கிறான். பொருள்கள் தோன்றி மறையும் குணம் படைத்தவை (ஈசாவாஸ்யம் இதம் சர்வம், யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்). இவன் உயர்ந்த ஞானத்தால் இந்த நிலையற்ற

உலகத்தினின்றும் விடுபட்டு, மாறாத ஈசன் என்ற நிலையை அடைகிறான். இதுவே சாயுஜ்ய நிலை.

நான் என்ற நிலை இப்பொழுது சற்றுத் தெளிவாகிறது. வித்யை, அவித்யை போன்ற முதல் படிகளைத் தாண்டி, சாதகன் மேலே செல்லத் துவங்குகிறான். இந்நிலையில் அவன் உள்ளத்தில் விருப்பு-வெறுப்புகள் நீங்குகின்றன. நான் என்கிற இந்த ஆத்மா, பரமாத்மாவின் அம்சம் என்பது வேதாந்தத்தின் நிர்ணயம். பரமாத்ம நிலையில் என் பொருள், என் செயல் என்கிற பொய்யான பாவங்கள் விலக நான் அவனே, நான் அந்தப் பரம்பொருளே என்கிற பேரறிவு வாய்க்கிறது.

வேதாந்தத்தின் சாரம் ஈசாவாஸ்யம். இது நான் யார் என்ற கேள்விக்கு, ஒரு நல்ல விடையை அளிக்க வல்லது. அளவில் சிறியதாயினும் ஆன்மிகப் பரிமாணத்தில் மிகவும் மேம்பட்டது.

தியாகம் செய் - அநுபவி - பிறர் பொருளுக்கு இச்சைப்படாதே என்ற இந்தக் கருத்து வேதாந்திக்கு மட்டுமல்ல, சம்சாரிக்கும் பொருந்தும்.

தொடரும்...

---

## பௌர்ணமி கிரிவலம் வரும் நாட்கள் - 2011

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 13 | சனி | நள்ளிரவு 12.20 | 14 | ஞாயிறு | நள்ளிரவு 12.40 |
| செப்டம்பர் 11 | ஞாயிறு | மதியம் 01.50 | 12 | திங்கள் | மாலை 03.15 |
| அக்டோபர் 11 | செவ்வாய் | காலை 05.15 | 12 | புதன் | காலை 06.00 |
| நவம்பர் 10 | வியாழன் | நள்ளிரவு 12.15 | 11 | வெள்ளி | அதிகாலை 02.10 |
| டிசம்பர் 9 | வெள்ளி | மாலை 06.45 | 10 | சனி | இரவு 08.15 |

# சிவானந்த லஹரி

## கௌதமன்

*(61)*

***அங்கோலம் நிஜபீ ஜஸந்ததி - ரயஸ்காந்தோபலம் ஸூசிகா***
***ஸாத்வீ நைஜவிபும் லதா க்ஷிதிருஹம் லிந்து ஸ் ஸரித் வல்லபம்।***
***ப்ராப்னோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்த த்வயம்***
***சேதோவ்ருத்தி ருபேத்ய திஷ்ட தி ஸத் ஸா பக்திரித் யுச்யதே।।***

*ஏறழிஞ்சல் என்னும் மரத்தை அதன் விதைகள் போலும், காந்தக் கல்லை ஊசி போலவும், தனது மணவாளனைப் பதிவ்ரதை போன்றும், மரத்தைக் கொடி போலவும் கடலை நதிபோலவும், ஒருவனது உள்ளத்தின் ஓட்டம் பரமசிவனது திருவடித்தாமரையைநாடிஎப்போதும்நிலைபெற்றிருந்தால் அதுவே பக்தி எனப்படும். (ஏறழிஞ்சல் மரத்தின் விதைகள் பூமியில் விழுந்தபின், ஊர்ந்து சென்று மீண்டும் அம்மரத்திலேயே ஒட்டிக் கொள்ளும்).*

*(62)*

***ஆனந்தா ச்ருபி ராதனோதி புலகம் நைர்மல்யதச் சாதனம்***
***வாசா சஙஅக முகே ஸ்திதைச்ச ஜடராபூர்த்திம் சரித்ராம்ருதை:।***
***ருத்ராகைஷர் பஸிதேன தேவ வபுஷோ ரக்ஷாம் பவத் பாவனா***
***பர்யங்கே விநிவேச்ய பக்தி ஜனனி பக்தாரபகம் ரக்ஷதி।।***

*மஹா தேவா! நினது பக்தியாகிய தாய், பக்தனான குழந்தையை ஆனந்தக் கண்ணீரைக் கொண்டு மயிர்க் கூச்சல் ஏற்படும்படி குளிப்பாட்டி, மாசற அறமனமென்னும் ஆடாயுடுத்தி, வாக்கு என்னும் சங்கத்தின் (பாலாடையினை) வாயிலாக நினது சரித்திரமெனும் அமிருதத்தை நிறைய அருந்தச் செய்து, ருத்ராக்ஷ மாலை விபூதிகளைக் கொண்டு உடல் ரக்ஷை செய்து, தியானமாகிய தொட்டிலில் படுக்க வைத்துக் காக்கிறாள்.*

*(63)*

***மார்கா வர்தித பாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்சாயதே***
***கண்டூஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபு ஷேகாயதே।***
***கிஞ்சித்ப க்ஷித மாம்ஸசேஷகபலம் நவ்யோபராராயதே***
***பக்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ பக்தாவதம்ஸாயதே।।***

*வழி நடந்து தேய்ந்த (கண்ணப்பனின்) பாதரக்ஷை பசுபதியான உனக்கு வைக்கப்படும் கூர்ச்சமாகிறது. (அந்தக் கண்ணப்பன்) வாயிலிருந்து உமிழ்ந்த நீர் முப்புரமெரித்த உனக்கு திவ்விய அபிஷேகமாகிறது. (அவன்) சிறிது உண்டு மிச்சமான மாமிசக் கவளம் புதிதாக உண்டாக்கிய நைவேத்யமாகிறது. (இவற்றையளித்த) வேடனும் சிறந்த அடியானாகிறான், ஆச்சர்யம்! பக்தி எதைத்தான் செய்யாது?*

*(64)*

***வக்ஷஸ்தாடன மந்தகஸ்ய கடினாபஸ்மார ஸம்மர்தனம்***
***பூபருத்பர்யடனம் நமத்ஸுரசிர: - கோடீர ஸங்கர்ஷணம்।***
***கர்மேதம் மருதுலஸ்ய தாவகபத த்வந்த் வஸ்ய கௌரீபதே***
***மச்சேதோ மணி பாது காவிஹரணம் சம்போ ஸதாங்கீகுரு।।***

*உமாபதியே! மென்மையான உனது இணையடிகளுக்கு யமனது மார்பில் உதைப்பது, அஞ்ஞானமென்ற கடினமான அபஸ்மாரத்தை மிதிப்பது, (கைலாய) கிரியில் அலைவது, வணங்கும் தேவர்களது கிரீடங்களில் உறைவது ஆகிய இவை தொழிலாயுள்ளது. (அவற்றால் ஏற்படும் வேதனையை விலக்க) எனது மனமாகிய இரத்தினப் பாதுகையை அங்கீகரித்து, அதனை அணிந்து கொண்டு சஞ்சரிப்பீராக.*

*(65)*

***வக்ஷஸ்தாடன சங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:***
***கோடீரோஜ் ஜ்வல ரத்னதீ பகலிகா நீராஜனம் குர்வதே।***
***த்ருஷ்ட்வா முக்திவதூ ஸ்தனோதி நிப்ருதாச்லேஷம் பவானீபதே***
***யச்சேதஸ் தவ பாதபத்ம பஜனம் தஸ்யேஹ கிம் துர்லபம்।।***

பவானிபதியே (உனது திருவடித் தாமரையைக் கண்டு) மார்பில் உதை விழுமோ என ஐயுற்று யமன் ஓடுகிறான் (வணங்குங்கால்) தேவர்களால் கிரீடங்களில் பதிக்கப்பட்ட மொட்டு போன்ற ரத்னங்களாகிய தீபங்களால் ஆரத்தி எடுக்கிறார்கள். எவனது உள்ளம் உன் திருவடிகளின் சேவையைப் புரிகிறதோ அவனுக்கு இங்கு அடைய வொண்ணாத எதுவுண்டு? அவனைக் கண்டதும் முக்தியென்னும் பெண் இறுகத் தழுவிக் கொள்கிறாள்.

*(66)*

***க்ரீடார்த்தம் ஸ்ருஜஸி ப்ரபஞ்ச மகிலம் க்ரீடாம்ருகா ஸ்தே ஜனா***
***யத்கர்மாசரிதம் மயா சபவத: ப்ரீத்யை பவத்யேவ தத்।***
***சம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நிச்சிதம்***
***தஸ்மான் மாமக ரக்ஷணம் பசுபதே கர்த்தவ்ய மேவ த்வயா।।***

சம்புவே! இவ்வுலகனைத்தையும் உமது விளையாட்டுக்காகப் படைக்கிறீர். ஸகல பிராணிகளும் உம் விளையாட்டிற்காக உள்ள பொம்மைகள். (அவர்களில் ஒருவனான) நான் செய்வதனைத்தும் கூட உமது ப்ரீதிக்காகவே ஆகிறது. உமது அடியார்களின் சந்தோஷத்திற்காகவே என்னை ஆட்டுவிப்பதும் காரணமாகிறது. ஆகவே, (வளர்ப்புப் பிராணி போன்ற) என்னைக் காத்தல் உமது கடமையாகிறது.

*(67)*

***பஹுவித பரிதோஷ பாஷ்பபூர***
***ஸ்புட புலகாங்கித சாரு - போக பூமிம்।***
***சிரபத பலகாங்க்ஷி ஸேவ்யமானாம்***
***பரமஸதா சிவபாவனாம் ப்ரபத்யே।।***

நிலையான பதவி என்ற மோக்ஷத்தையடைய விரும்புகிறவர்களால் போற்றப்படும் மேலான சதா சிவத்தியானத்தை அடைக்கலம் புகுகிறேன். (ஏனெனில் அந்த தியானம்) பற்பலவிதமான இன்பத்தால் ஆனந்தக்

கண்ணீர் பெருக்குவதற்கும் வெளிப்படையாக மயிர்க கூச்சுண்டாவதற்கும் நல்ல விளை நிலமாக உள்ளது.

*(68)*

***அமிதமு தம்ருதம் முஹுர் துஹந்தீம்***
***விமல பவத்பத கோஷ்ட மாவஸந்தீம்।***
***ஸதய பசுபதே ஸுபுண்ய பாகாம்***
***மம பரிபாலய பக்திதேனு மேகாம்॥***

*உயிர்களின் தலைவரே! தயை நிறைந்தவரே! எனது பக்தியென்ற பசுவை மாத்திரம் காத்தருளுங்கள். அப்பசு பேரின்பம் என்ற அளவற்ற அமுதத்தை மேன்மேலும் பெருக்கும். உமது திருவடிகள் என்ற பரிசுத்தமான கொட்டிலில் வசிக்கும், சிறந்த புண்யத்தின் பயனாகத் தோன்றும்.*

*(69)*

***ஜடதா பசுதா கலங்கிதா***
***குசிலசரத்வம் ச நாஸ்தி மயி தேவ।***
***அஸ்தி யதி ராஜமௌலே***
***பவதாபரணஸ்ய நாஸ்மி கிம் பாத்ரம்॥***

*மதியை சிரத்தில் அணிந்தவனே! என்னிடம் ஜடத்தன்மை, மிருகத் தன்மை, களங்கமுள்ள தன்மை, கோணலான தன்மை இவை ஒன்றும் இல்லையே. இவை ஏதாவது என்னிடம் இருக்குமாயின் உனது சித்தத்தில் அணியாக இருக்க நானும் பாத்திரனாயிருக்க மாட்டேனா? (ஸம்ஸ்கிருதத்தில் ஜலம் என்பது ஜடம் என்றும் மாறும். எனவே ஜடத்தன்மை என்பது பனியைப் பெருக்குவதாகக் கருதப்படும் சந்திரனின் ஜலத்தன்மையைக் குறிப்பது ஆகும். மிருகம் எனப்படும் மானின் அடையாளம் சந்திரனுள் இருப்பதால் சந்திரனுக்கு மிருகத்தன்மை உள்ளது. அதையே களங்கம் என்றும் சொல்கிறோம். பெருமான் அணிவது பூர்ண சந்திரனாக இன்றிப் பிறையாக இருப்பதால் அது கோணலாகிறது.)*

*(70)*


***அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ர புத்த்யா***
***வரிவஸிதும் ஸுலப: ப்ரஸன்ன மூர்த்தி।***
***அகணித பலதாயக: ப்ரபுர்மே***
***ஜகத்திகோ ஹ்ருதி ராஜசேக ரோஸ்தி।।***

*பிறைசூடிய பெருமான் மனத்தை வசப்படுத்தியவர்களால் உள்ளத்தும் புறத்தும் ஆராதிக்கக் கூடியவர், தெளிந்த உருவமுடையவர் (அல்லது அருள் புரியத் தயாராய் இருப்பவர்). எண்ணவியலாத நற்பயன்களை அளிப்பவர். சகலத்திற்கும் பிரபு. உலகத்திற்கு அதீதமானவர். (அத்தகையவர் எனது உள்ளத்தில் எப்பொழுதும் உறைகின்றார்.*

# இனிவரும் திருநாட்கள் . . .

## ரமண பக்தர்களுக்கு விசேஷ நாட்கள் - 2011

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்டு | 13 | சனி | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | வியாழன் | பகவான் அருணையடைந்த தினம் |
| | 28 | புதன் | நவராத்திரி விழா ஆரம்பம் |
| அக்டோபர் | 5 | புதன் | சரஸ்வதி பூஜை |
| | 6 | வியாழன் | விஜயதசமி |
| | 26 | புதன் | தீபாவளி |
| நவம்பர் | 29 | செவ்வாய் | கார்த்திகை உற்சவம் தொடக்கம் |
| டிசம்பர் | 8 | வியாழன் | கார்த்திகை தீபத் திருநாள் |



# ரமணரின் இந்திரா

## பாமதி மைந்தன்

***கரு உண்மை; உரு கற்பனை***

*கண்ணை மூடித் தியானம் செய்தால் எல்லோராலும் பகவானை மனதில் பிடிக்க முடிகிறதா?*

*ஆனால் லலிதாவும் இந்திராவும் கண்களை மூடினால், அவர்கள் மனம் ரமணரின் பாதகமலங்களையே சுற்றி வரும்.*

*லலிதா துடுக்கு, சமர்த்து; இந்திரா சாந்தம், கம்பீரம். ஆந்திராவைச் சேர்ந்த குர்ரம் சுப்பராமய்யாவின் புத்திரிகள் அவர்கள்.*

*நேரம் கிடைக்கும்போதெல்லாம் திருவண்ணா மலைக்கு வந்து ரமண தியானத்தில் மூழ்கி முத்தெடுப்பார் சுப்பராமைய்யா. அவர் கல்லூரிப் பேராசிரியர், கவிஞர், அறிஞர்.*

*1937-ஆம் ஆண்டு. சுப்பராமையா தனது மகள் லலிதாவுடன் ரமணாஸ்ரமம் வந்தார்.*

*ரமணாஸ்ரமத்தின் தியானக்கூடம், ரமண பக்தர்களின் சொர்க்க பூமி. அங்கு வருபவர்களுள் நிம்மதியைத் தேடுபவர்கள், தங்களைத் தேடுபவர்கள், தெய்வத்தைத் தேடுபவர்கள் என்று பலரும் அமர்ந்திருக்க, நடுநாயகமாக ரமணர் வீற்றிருப்பார்.*

*துடுக்கான லலிதா அன்று தன்னோடு விளையாட, ஒருவரும் இல்லையே என இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தாள்.*



ஹாலுக்கு வரும் மயிலை அவள் துரத்த முடியாது. குரங்குகளைக் கண்டால் அவளுக்குப் பயம். அணில் அவளை நெருங்குவதே இல்லை. நாய், சொறி பிடித்தது, சே, வேண்டாம்.

அந்தப் பெரிய ஹாலில் பலரும் விறைப்பாக அமர்ந்தவாறும், கண்களை மூடிக் கொண்டும், ரமணரைத் தரிசித்துக் கொண்டும், பாராயணம் செய்து கொண்டும் இருக்கிறார்கள்.

லலிதாவுடன் விளையாட யாருமில்லை. தேடிப் பார்த்ததில் 'தாத்தா சாமிதான் 'சும்மா' இருக்கார். அவர்தான் எனக்கு லாயக்கு' என நினைத்தாள். 'சும்மா இருப்பது' என்பது மாபெரும் தவம் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

ரமணரின் பக்கத்தில் போய் நின்றாள் லலிதா. அவருக்கு ஏதாவது சேவை செய்யவா? ம்ஹூம், ஒரே சேஷ்டைதான். விசிறியை ஆட்டிச் சத்தம் செய்வாள். நூல்களைப்

புரட்டுவாள். அவை கீழே விழும். சிலர் கண்களைத் திறந்து பார்ப்பர். நீண்ட பொறுமைக்குப் பிறகு விஷமம் அதிகமானால் மகரிஷியே, ‘‘ஏய், என்ன பண்ற....?’’ என்று லேசாக அதட்டுவார்.

உடனே லலிதா வாய் குவித்து, மெல்லத் தலையாட்டி, ‘‘சாமி, நா ஒண்ணுமே பண்ணலே, சும்மாதான் இருக்கேன்’’ என்பாளே, அது கொள்ளை அழகு!

பகவானே சிரித்து, ‘‘இவ இப்படித் துறுதுறுன்னு ஏதேதோ செய்றா. ஆனா ‘நா ஒன்னுமே செய்யல’ என்கிறா. ஒரு சிறுமி இதச் சொல்ல முடியறது. ஆனா பெரியவா இதப் புரிஞ்சிக்க முடியலியே’’ என்றார். கீதையின் சாரத்தைக் குழந்தை மூலமாக இப்படிப் பிழிந்து கொடுத்தார் ரமணர்.

1941-ஆம் ஆண்டு. மே மாத மூன்றாம் வாரம். மீண்டும் திருவண்ணாமலையில் தன் குடும்பத்துடன் சுப்பராமையா. இந்த முறை 9 வயதான லலிதாவுடன், இளையவள் 5 வயதான இந்திராவும் வந்திருந்தாள். பட்டுச் சொக்காவில் இருவரும் சிட்டுக்களாக ஓடியாடி எல்லோரையும் ஈர்த்தனர்.

முக்கியமாக, ரமணருக்கு இந்திராவைப் பிடித்துப் போயிற்று. பாடச் சொன்னால் பாடுகிறாள். ஆடச் சொன்னால் ஆடுகிறாள். ஆனால் இந்த லலிதாவிற்கு என்ன வந்தது? திடீரென சங்கோஜப்பட ஆரம்பித்து விட்டாளே!

‘நான் ஒரு பெண்’ என்ற தேகாத்ம புத்தி தலையெடுக்கும் வயதோ! அதனால்தான் ரமணரின் திருமுன்பு அவள் இருக்க முடியவில்லையோ? இந்திரா பாடி முடித்ததும், லலிதாவைப் பாடச் சொன்னார் ரமணர். அவள் தயங்கினாள். மகரிஷி விடவில்லை.

''என்ன லலிதா? யார் கிட்டேயும் நா எதுவும் கேட்கிறதில்ல. நீ என்னையே கேக்க வச்சுட்டியே! இந்திராவப் பாரு. அவ மாதிரி பாடு'' என்றார்.

இவ்வளவிற்குப் பிறகே லலிதா பாடினாள். பிறகு இருவரும் சேர்ந்து ஆடினர். மகரிஷியின் சபை குழந்தைகளால் களை கட்டியது. 'நான் யார்?' என்ற தேடுதலின் நடுவில், சாதகர்களின் மனம் லேசாவதற்கு ரமணரே அந்தக் குழந்தைகளின் மூலம் நாட்டிய நிகழ்ச்சி நடத்தி அங்கிருந்த இறுக்கத்தை நீக்கினார் போலும்.

ஒரு நாள் சுப்பராமையா 'உபதேச சாரம்' என்ற தெலுங்கு மொழி நூலை ரமணர் முன்பு அமர்ந்து படித்தார். அதன் முன்பக்கத்தில் சம்ஸ்கிருத மொழியில் நான்கு வரிகள் அச்சாகியிருந்தன.

அதைப் பார்த்த இந்திரா அதிலுள்ள மூன்று வார்த்தைகளை 'நாஹம் தேஹம் - கோஹம் - ஸோஹம்' -('நான் தேகமல்ல - நான் யார்? - அவன் நான்') என எழுத்துக் கூட்டிக் கூட்டி ஒவ்வொன்றாக வாசித்தாள்.

உதட்டோடு, உள்ளத்தையும் குவித்து வாசித்த அவளை மகரிஷி உற்று நோக்கினார். அவளிடம் ஏதோ ஓர் ஊற்று பெருக்கெடுப்பதை அவர் கண்டதுபோல் இருந்தது.

''இந்திரா, சரியாத்தான் நீ படிச்சேம்மா. இந்த வரிகளே உனக்குப் போதும். பாடலின் மிச்ச பகுதியை நீ படிக்க வேண்டாம். நீ இப்போ வாசிச்சியே, அதான் எல்லா அறிவோட சாரம். இனி இதையே மந்திரம் மாதிரி சொல்லிண்டிரு. உனக்கு எல்லாமே இது மூலம் சித்திக்கும்'' என்றார் ரமணர்.

உடனே, தாத்தாசாமி தனக்கு மட்டும் சொல்லிக் கொடுத்த மூன்று வரி மந்திரத்தை முணுமுணுக்க ஆரம்பித்தாள் இந்திரா.

சரியாகச் சொல்லத் தைரியம் வந்ததும் சத்தமாகப் பல ராகங்களில் சொல்ல ஆரம்பித்தாள்.

பின் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ரமணர், ''அந்த மந்திரத்தச் சொல்லு, பாக்கலாம்'' என்பார். அவளும் சொல்வாள், ஒரு சிஷ்யையாக!

அவர் அவளது உச்சரிப்பையா கவனித்தார்? இல்லை. ஏதோ ஓர் உச்ச நிலைக்குக் கொண்டு செல்வதற்கு அவர் அவளைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். சுப்பராமையா அதைப் பார்த்து வியந்தார்.

இந்த மந்திரம் முதன் முதலில் ரமணர், தமது முக்கியச் சீடரான காவ்ய கண்ட கணபதி என்ற மிகப் பெரிய பண்டிதருக்குக் கூறியருளியது. 'ஆஹா, இந்த மந்திரம்தான் என்னவோர் அருமையானது' என சுப்பராமையா அதை ரசித்தார். 'இம்மந்திரம் உயர்ந்த சாதகர்களுக்கானது. இந்தப் பிராணாயாமம் சாதாரண ஒரு மூச்சுப் பயிற்சி அல்ல.

முதலில், கோஹம் 'நான் யார்?' என்ற விசாரத்தை பூரகமாக - உள்மூச்சாக சாதகன் இழுக்க வேண்டும்.

அடுத்து, ஸோஹம் - 'அவனே நான்' என்ற வ்ருத்தியை கும்பகமாக - மூச்சாகக் கருதி, பிடித்து வைக்கப் பழக வேண்டும்.

முடிவில்,'நாஹம் தேஹம்' - 'நான் உடலல்ல' என்ற அனுபவம் ரேசகமாக - வெளிமூச்சாக விட வேண்டும். இதுவே 'ஞான பிராணாயாமம்.' அறிவுஜீவியான சுப்பராமையாவின் புத்தியை ஒரு கேள்வி அடிக்கடி குடைந்து கொண்டிருந்தது.

'அறிவிலும் அனுபவத்திலும் மிக்க பக்தர்களும் சாதகர்களுமான நாங்கள், மகரிஷியின் ஓர் உபதேச த்திற்காகக் காத்துக் கிடக்கும்போது, இவர் ஏன் ஒரு

சிறுமியிடம் இவ்வளவு பெரிய விஷயத்தைத் திணிக்கிறார்? அவளுக்கு என்ன புரியும்?'

அன்று சுப்பராமையா தியானித்துக் கொண்டிருந்தார். இந்திராவிற்குப் பசித்தது. அப்பாவைத் தொந்தரவு செய்யாது அவள் ஒரு மூலையில் அமர்ந்தாள்.

ஆன்மப் பசியோ, அடிவயிற்றுப் பசியோ அனைத்தும் அறியும் பகவான் அவளைக் கவனித்தார்.

உடனே அவளது அப்பாவிடம், ''கொழந்தைக்குப் பசிக்குது. அதக் கவனிக்காம தியானம் எதுக்கு?'' என்று கேட்டார் ரமணர்.

ஒருநாள் பகவான் அந்த இரண்டு சிறுமிகளுடனும் விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்தார்.

லலிதாவின் கையைப் பார்த்து, ''இது யாரோட கை?'' என்று கேட்டார். அவள், ''என் கை'' என்றாள்.

''இல்ல'' என்றார் பகவான்.

''இது யாரோட கண்ணு?''

''என்னோட கண்ணுதான்'' - லலிதா.

''இல்ல''....இவ்வாறு ரமணர் லலிதாவிடம் ஒவ்வொன்றாகக் கேட்கவும் அவள் அது தன்னுடையதுதான் என்று சொல்லி வந்தாள்.

முடிவில் ரமணர், ''எதுவுமே ஒன்னுடையதில்ல. உன் உடம்பே பகவானுக்குத்தான் சொந்தம்'' என்று கூறி முடித்தார். லலிதா புரியாமல் விழித்தாள்.

ஆனால் இந்த உரையாடலை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த இந்திரா 'ஓ, அப்படியா!' என்று உள்ளுக்குள்ளேயே உச்சரித்துக் கொண்டாள்.

விடுமுறை முடிந்தது. இரண்டு பெண்களும் ஊருக்குச் செல்ல ரமணரிடம் விடைபெற வந்தனர்.

காலை நேரம். பகவான் மலைக்குப் போகும் நேரம். லலிதா ஏதோ வேடிக்கை பார்த்தபடி இருந்தாள். ஆனால் இந்திரா எதையோ எதிர்பார்த்து ஏங்கியிருப்பதாகக் காணப்பட்டாள்.

பகவான் இந்திராவை விழுங்கும்படியாகப் பார்த்து, ''அப்போ, நீ உன் எடத்துக்குப் போற. நா என்னோட எடத்துக்குப் போறேன்'' என்று கூறிவிட்டு அருணாசல மலையில் அவர் ஏற ஆரம்பித்தார்.

கொஞ்சமாவது பகவான் திரும்பிப் பார்க்க வேண்டுமே, ம்ஹூம். இந்திராவின் இதயம் பாரமானது. 'தாத்தாசாமி, இனி உங்கள நா எப்போ பார்ப்பேன்?' என்று அவளது உள்ளம் விம்மியது. ஆனாலும் ஓர் ஆறுதல்.

அவளுக்குத்தான் தாத்தாசாமி வழங்கிய மூன்று மந்திரங்கள் இருக்கே! அதைச் சொன்னால் நான் எங்கிருந்தாலும் சாமி என்னை நல்லா கவனிச்சுப்பார் என நினைத்தாள்.

ஊருக்குச் சென்றவுடன் லலிதாவும் இந்திராவும் தந்தைக்குக் கடிதம் எழுதினர். கடிதங்கள் மகரிஷி முன்பு வைக்கப்பட்டன.

''பகவானிடம் கூறுங்கள் அப்பா, நான் தினமும் மந்திரத்தைச் சொல்கிறேன். அவரையே நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்று'' என எழுதப்பட்டிருந்த இந்திராவின் கடிதத்தைக் கூர்ந்து பார்த்தார் மகரிஷி. அவரது பார்வை எதைக் கூறியது?

இனி இந்திராவைப் பார்க்க முடியாது என்பதையா? தான் கற்றுத் தந்ததைக் கொண்டு கைதேர்ந்தவளாகி,

*பிறந்த நோக்கத்தை அடைந்து முக்தி பெற்றுவிடுவாள் என்பதையா?*

*நாட்கள் வேகமாகச் சென்று இரண்டு வருடங்களாயின. 1943 -ஆம் ஆண்டு. இந்திரா அகத்திலும் புறத்திலும் நன்கு வளர்ந்திருந்தாள்.*

*அப்போதுதான் திடீரென்று அவளுக்கு அம்மை வார்த்தது. இரண்டு வாரங்களில் படுத்த படுக்கையாகி வாடிப் போனாள். உண்ண முடியவில்லை. உறக்கமில்லை. ஆனாலும்...,*

*உடல் வேதனையை அனுபவித்தாலும், ரமணர் அருளிய மூன்று மந்திரங்களைச் சொல்ல ஆரம்பித்தால் போதும் இந்திராவின் முகம் பிரகாசிக்கும்.*

*மூச்சைச் சிரமப்பட்டு விட்டாலும் மந்திரத்தை விடாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். சுப்பராமையாவும் பிற பக்தர்களும் ரமணரின் திருவுருவப் படத்தின் முன்பு அவளைக் கிடத்திப் பிரார்த்தித்தனர்.*

*கவிஞரான சுப்பராமையா, தமது மகள் ஓர் அற்புதமான ஒரு சோக காவியத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தார்.*

*இவள் தெரிந்துதான் 'ஞான பிராணாயாமம்' புரிகிறாளா? ...ஓ, இவளது பிராரப்தம் தெரிந்துதான் பகவான் அவ்வளவு பிரயத்தனம் எடுத்து இவளுக்குச் சொல்லித் தந்தாரோ!' என சுப்பராமையா எண்ணினார். அதை எண்ணியபோது பகவானிடம் அவருக்கு பக்தி பெருகியது.*

*எஞ்சிய நாட்கள் ஏனையோருக்கு இறுக்கமாகச் சென்றாலும், இந்திரா எதனாலும் பாதிக்கப்படாமல் இருந்தாள்! கடைசியில் அந்தச் சோகமான நாளும் வந்தது. அன்று ஸ்ரீராமநவமி. ஏப்ரல் 13.*

பக்தர்கள் இந்திராவைச் சூழ்ந்திருந்தனர். மூன்று மந்திரங்களையும், விடும் மூச்சாக ஓதிக்கொண்டே இந்திரா இறைவனடி சேர்ந்துவிட்டாள்.

அங்குத் துக்கம் விசாரிக்க யாரும் வரவில்லை, யாராலும் அழ முடியவில்லை! ஏனெனில் அவள் தேகத்தைத் துப்பிவிட்டு, தெய்வ பதத்தைச் சேர்ந்துவிட்டதாகப் பலரும் நம்பினர்; உணர்ந்தனர்.

'பல வருடங்கள் விசாரத்திற்குப் பிறகும் சாதகர்களுக்குக் கிடைக்காத ஒரு பதவியை, இவள் குருகிருபையால் எளிதாகப் பெற்று, பகவானை அடைந்துவிட்டாளே!' என்று பக்தர்கள் மெய்சிலிர்த்தனர்.

இந்திராவின் உடலைப் புதைத்த இடத்தில் ஒரு கல்லறை எழுப்பினார் சுப்பராமையா.

அதன் மீது 'கோஹம் - நாஹம் தேஹம் - ஸோஹம்' என்பதைப் பொறித்து வைத்தார். அது பக்தர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இன்றும் விளங்குகிறது.

நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், மே **2011.**

---

# ரமணோதயம்

Voluntary Services


K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770
ராஜேஷ் M.S. 9840075778
வஸந்தா ராகவன் 9445432335

# வாழ வழி காட்டும் வடமொழி இலக்கியங்கள்

Dr. A.V. ராஜகோபாலன்

## மகளிர் மாண்பு

சமஸ்கிருத இலக்கியங்கள் மனித வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் அலசும் திறன் வாய்ந்தவையாகும். அந்தக் காலத்தில் ஒழுக்கம், அறிவுத்திண்மை, தர்க்கம் இவை மூன்றும் (Ethics, Wisdom, Logic) பெரிதும் போற்றப்பட்டன. இதனால் பல்வேறு கருத்துக்களுக்கு மதிப்பும், பதிய வாதங்களுக்கு வரவேற்பும் கிடைத்தன. இவை 21ஆம் நூற்றாண்டிலும் நமக்கு சிறந்த கலங்கரை விளக்கங்களாக அமைந்துள்ளன.

இதன் முந்தைய பகுதியில் வேத இலக்கியம் என்ற தலைப்பில் சில கருத்துக்களை பார்த்தோம். அங்கு மகளிர்க்கு அளிக்கப்பட்ட சிறந்த சமுதாய அங்கீகாரத்தை ரசித்தோம். இப் பகுதியில் வேறு சில சம்ஸ்கிருத நூல்களில் பெண்டிர் புகழ்பாடும் பாங்கினைக் காண்போம்.

வேதங்களுடன் ஒட்டிப் பேசப்படுபவை உபநிடதங்கள். இவற்றில் மைத்ரேயி, கார்க்கி போன்ற அறிவு முதிர்ந்த பெண்டிர், யாக்ஞவல்கியர் போன்ற புகழ் பெற்ற ரிஷிகளுடன் கூட விவாதம் செய்கின்ற விவரம் கூறப்படுகிறது. பெண்களுக்கு ஆண்களுக்குச் சமமான அங்கீகாரம் இருந்ததும் கூறப்படுகிறது. அவர்களின் அறிவு முதிர்ச்சியும் இதனால் கூறப்படுகிறது.

## வால்மீகி

இக்கருத்துகள் வால்மீகி ராமாயணத்தில் ரசமான முறையில், பாத்திரங்கள் உருவி உயிர் பெறுகின்றன. சீதா கலியாணத்தில், உயர்ந்த பதிவிரதையாக அவள் ராமனுக்கு அமைவாள் என்பதைக் கவி கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

***இயம் சீதா மமசுதா ஸஹதர்மசரீ தவ***
***ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணீம்!***
***(கிருஷ்ணீஷ்ய பாணினா)***

***பதிவ்ரதா மஹாபாகா சாயேவானுகதா ஸதா***

இவள் உன் தரும காரியங்களில் உறுதுணையாக அமைவாள். பதிவிரதையான இவள் உன்னை நிழல் போலத் தொடர்வாள் என்று பாணிகிரஹணம் செய்து வைக்கின்றான் ஜனகன். சீதை என்னும் பெண் தெய்வம் எந்த அளவுக்கு இராமனுக்கு உறுதுணையாக இருந்தது என்பதற்கு ஒரு முன்னுரை இது.

இராமாயணத்தில் அதிகம் பாகம் வகிக்காதவள், சுமித்ரை. இவள்ஒருஉயரியதபஸ்வியாகஉருவெடுக்கிறாள். இராமன் தவவேடம் தலைக்கொண்டு வனம் செல்லப் போகிறாள் என்று அறிந்ததும் தன் மகன் இலக்குவனிடம், இராமனைத் தயரதன் போலும், சீதையை என்னைப் போலும் கருத்தில் கொண்டு, கானகமே அயோத்தியாக அமைய, சுகமாகச் செல் என் செல்வனே என்கிறாள்.

***ராமம் சதரதம் வித்தி, மாம் வித்தி ஜனகாத்மஜாம்***
***அயோத்யாம் அடவீம் வித்தி கச்ச தாத யதாசுகம்***

ஒரு கூட்டுக் குடும்பத்தில், ஒற்றுமையை எப்படி ஒரு பெண்ணால் மட்டும் வளர்க்க முடியும் என்பதற்குத் தலை சிறந்த உதாரணம்.

*காட்டிற்குச் செல்லும் முன்னர், இராமன் சீதையை நீ இங்கேயே இரு! என்று சொல்கிறான். பல காரணங்களால் தானும் உடன் வருவதாக சீதை கூறியும் இராமன் அதை ஏற்கவில்லை. கடைசியில் சீதை ஒரு அஸ்திரத்தை ஏவுகிறாள். என்னை விட்டுச் சென்றால் என் தந்தையான ஜனகர் உம்மை பெண்ணுருக் கொண்ட ஒரு பேடியாக அல்லவா நினைப்பார் என்கிறாள்!*

***கிட் த்வா மன்யத வைதேஹ: பிதாமே மிதிலாதிப:***
***ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்திரியம் புருஷ விக்ரஹம்***

*வேறு வழியில்லை இராமனுக்கு, அவளை அழைத்துச் செல்ல இசைகிறான். தன் பதிவிரதா தர்மத்தை நிலைநாட்ட சற்றே நிந்தா ஸ்துதியை பிராட்டி கையாள்கிறாள்.*

*காப்பியத்தின் இறுதியில் இதே சீதையை சரணாகத தத்துவத்தினை எல்லை நிலத்தில் வைத்து சித்தரிக்கின்றான் வால்மீகி. ராவணவதம் ஆன பின்னர், சீதையை அழைத்துச் செல் இராமன் ஆணைப்படி அனுமன் அசோகவனபம் வருகின்றான். அங்குள்ள அரக்கியரைக் கண்டதும் கோபம் மேலிட்டு அவர்களை அழிக்க அனுமதி கோருகிறான். பிராட்டி கூறும் சொற்கள் இந்தச் சூழலில் பிரசித்தி பெற்றவை.*

*இவர்கள் ராவணனை அண்டிப் பிழைப்பவர்கள். இவர்கள் மீது ஏன் வெறுப்பு கொள்ள வேண்டும். குற்றம் செய்யாதவர் என்று எவருமில்லை. கருணை காட்டுவதே சான்றோர் செயல் என்கிறாள்*

***கார்யம் கருணம் ஆர்யேண***
***ந கஸ்சின் ந அபராத்யதி!***

*உயரிய குணக் குன்றாக சீதை காட்சியளிக்கின்றாள். இதன் காரணமாகவே சீதாயா: சரிதம் மஹத் என்று ராம காதைக்கு சீதையின் சரிதம் என்ற பெயர் ஏற்பட்டது. சீதையின் அரும் குணங்கள் பின்பு வந்த கவிகளான பவபூதி போன்றவர்களாலும் பறைசாற்றப்பட்டன.*

*சீதையின் பாத்திரப் படைப்பு ஒரு அழகான பரிணாம வளர்ச்சி. தாயைவிட தந்தையிடமே அதிகம் பாசம் கொண்ட ராஜகுமாரியாக அறிமுகம் ஆகிறாள், அழகான கணவன், பெரிய இடத்தில் பிறந்து, அதை விடப் பெரிய இடத்தில் வாழ்க்கைப் படுகிறாள். அயோத்தியா காண்டத்தில் இளம் பருவப் பெண்ணாக துடுக்கு மிகுந்த பாத்திரமாக காட்சியிளிக்கிறாள், நான் உனக்கு முன்பாக கோரமான காட்டில் நடந்து செல்லத் தயார் என்று ராமனிடம் தெரிவிக்கிறாள் (அக்ரதஸதே கமிஷ்யாமி) க்ஷத்திரயப் பெண்ணின் தைரியமும், பாரதப் பெண்ணின் கற்பும் ஒருங்கே அவள் பாத்திரப் படைப்பில் காணக் கிடைக்கின்றன.*

*அதே நேரத்தில், போகத்தில் வாழ்ந்த ராஜகுமாரி, கஷ்டத்தை எப்படி எதிர் கொள்கிறாள் என்பதும் சுவையான வர்ணனை. மரவுரியை அணியும் தருணம். உயர்ந்த பட்டாடைகளை அணிந்த பெண், கடுமையான மரப்பட்டைகளாலான ஆடையைக் கண்டு திகைக்கிறாள். இதை எப்படி முனிவர்கள் அணிகின்றனரோ? (கதம் நு சீரம் பத்னந்தி) என்று வியக்கிறாள். அதை அணிந்து துக்கத்தால் பெருமூச்சு விடுகிறாளாம் (ஸா முமோஹ முஹுர்முஹு:).*

*அயோத்யா காண்டத்தில் இளம் சுகுமாரியாகக் காட்சியளிக்கும் பிராட்டி, ஆரண்ய காண்டத்தில், முதிர்ச்சி அடைந்த பத்னியாகக் காட்சியளிக்கிறாள். சரபங்கர், சுதீக்ஷ்ணரி போன்ற முனிபுங்கவர்களுக்கு, தவத்திற்கு இடையூறு செய்யும் அரக்கர்களை அழிப்பேன் என்று இராமன் உறுதி அளிக்கிறான். சீதைக்கு இது ஒப்பவில்லை. நம்மைத் துன்புறுத்தாத அரக்கர்களை நாம் ஏன் ஒழிக்க முற்பட வேண்டும் (அபராதம் வினா ஹன்தும் லோகான் வீர நாகமயே) என்கிறாள்.*

வனவாசமும் தவவேடமும் எங்கே, ஆயுதங்களும் போரும் எங்கே என்று மேலும் வாதிடுகிறாள்.

**க்வச சஙஅதரம் க்வ ச வனம் க்வச க்ஷாத்ரம் தப: க்வச**

க்வ என்ற சொல்லை (எங்கே என்று பொருள்படும்) பலமுறை அழுத்தத்திற்காக பயன்படுத்துகிறாள். இறுதியில் இதெல்லாம் அன்பினால் சொல்லப்படுவது அறிவுரை அல்ல! என்றும் பணிவுடன் கூறுகிறாள்.

பின்னர் சுந்தரகாண்டத்தில், ராவணன் இராமனைத் துற என்னை அடை என்று வற்புறுத்தும் போது, சீதை சொல்கிறாள் எளியவனோ நாட்டை இழந்தவனோ, என் கணவனே! என் தலைவன்! என்று உணர்ச்சி பொங்கச் சொல்கிறாள் (தீனோ வா ராஜ். ஹீனோ வா, யோ மே பர்தா சமேகுரு:).

அறியாப் பெண்ணாக சீதையை அறிமுகப்படுத்தி, அவளின் முதிர்ச்சியையும், பெருமையையும் வால்மீகி எடுத்துக் காட்டும் விதம் மிகவும் நவீனமான முறை. இறுதியில் கருணையின் வடிவமாக நகஸ்சித் ந சுபராத்யதி என்ற ஸ்லோகத்தில் காட்சியளிக்கிறாள். இந்தியப் பெண்மைக்கு சீதை ஒரு சீரிய எடுத்துக்காட்டு.

## காளிதாசன்

பெண்மையைப் போற்றுவதில் காளிதாசன் இணையற்றவன். அவனுடைய காவ்யநாயகிகள் பாரவதி, சீதை, சுதஷிணை, சகுந்தலை, மாளவிகா, ஊர்வசி போன்றவர்கள். மிகச் சிறந்த குணநலங்களும் சீரிய அறிவும் கண்ணியமான அழகும் பதிவிரதா தர்மத்தில் பற்றும் கொண்டவர்கள். சகுந்தலை எந்த அளவு இயற்கையை நேசித்தாள் என்பது கண்வர் கூற்றான கீழ்க் கண்ட ஸ்லோகத்தால் தெரிய வரும்.

***பாதும் ந பிரதமம் வியவஸ்யதி ஜலம்***
***யுஷ்மாத் ஸ்வபீதேஷுயா***
***நா தத்தே ப்ரிய மண்ட ருபி பவதாம்***
***ஸ்நேஹேன யா பல்லவம்।***
***ஆத்யே வ: குசும ப்ரசூதி சமயே***
***யஸ்யா பவத்யுத்சவ:***
***சேயம் யாதி சகுந்தலா பதிசிரஹம்***
***சர்வை: அநுஞாயதாம்।।***

*சகுந்தலை தன் வளர்ப்பு தந்தையாகிய கண்வரையும் தான் பிறந்து வளர்ந்த ஆசிரமத்தையும் விட்டு, துஷ்யந்தனின் நாட்டிற்குச் செல்லும் கட்டம். அப்பொழுது துயரத்துடன் கண்வர், காட்டிலுள்ள செடி கொடிகளை நோக்கி சொல்லுவார், உங்களை மிகவும் நேசித்த ச குந்தலை, கணவரில்லம் செல்லுகிறாள். எல்லோரும் அதற்கு அநுமதி அளியுங்கள்.*

*அவள் எந்த அளவிற்கு இயற்கையை நேசித்தாள் என்பதற்கு சில உதாரணங்களை சொல்லுகிறார் கண்வர். நீங்கள் நீர் பருகும் முன்னால் அவள் தண்ணீர் அருந்துவது இல்லை. அவளுக்கு இளம் மொட்டுகளைக் கொய்து அலங்கரிப்பதில் விருப்பம் அதிகம், இருப்பினும், சுற்றுச் சூழலில் கொண்ட ஆர்வத்தால் அவள் மலர்களைக் கொய்யவில்லை. இதோ இப்பொழுது பூக்கள் மலரும் நேரம் என்று ஒரு திருவிழா போலக் காத்து இருப்பாளே! அந்தச் சகுந்தலை போக இருக்கிறாள்.*

*பெண்டிர் எந்த அளவிற்கு இயற்கையை நேசித்தனர் என்பதற்கு இதை விட சிறந்த உதாரணம் உண்டோ!!.*

*குமாரசம்பவம் என்ற காவியம் முருகப் பெருமாளின் பிறப்பைக் குறித்த வரலாறு பற்றியதாகும். முன் கதையில் சிவன் தவம் செய்யக் கயிலாயம் வருகிறார். பார்வதி அவருக்குப் பணிவிடைகள் செய்கிறாள். தேவர்களின் நியமனப்படி, மன்மதன் சிவன்-பார்வதி*



இடையே காதல் தோற்றுவிக்க புஷ்ப பாணத்தைப் போடுகிறான். அதனால் சினமுற்ற சிவபெருமான், மன்மதனைத் தன் மூன்றாவது கண்ணினால் எரித்து சாம்பலாக்குகிறார். இதனால் பார்வது சிவன் கரம் பற்றப் பெரும் தவத்தைச் செய்கிறாள்.

அவளை சோதிக்க, சிவபெருமான் ஒரு பிரம்மச்சாரி வேஷத்தில் வந்து, தானே சிவனுடைய குணங்களை குறைவாகக் கூறுகிறார். பார்வதி மிகவும் அழகாக (தர்க்க ரீதியாக), அந்தக் குறைகளையே நிறைவாகக் காட்டுகிறாள். மறுபடியும் சிவபெருமான் பேச ஆரம்பிக்கும் போது, சற்றே சினத்துடன் கூறுவாள்,

**ந கேவலம் யோ மஹதோப பாவுதே**
**ஸ்ருணோத் தஸ்மாத் அபி ய: ச பாபபாக்**

(இழி சொற்களைச் சொல்லுவது மட்டுமல்ல, கேட்பதும் பாபச் செயலே)

பெரு மகிழ்வுற்ற பரம சிவன், அவளைத் தடுத்தாட்கொண்டு உன் தவத்தால் என்னை விலைக்கு வாங்கிவிட்டாய். இன்று முதல் நான் உன் அடிமை என்று பார்வதி தேவியை மனைவியாக அடைகிறார்.

**அத்ய பிருப்ருத்ய வனதாங்கி தவாஸ்மி தாச:**
**க்ரீத: தபோபிரிதி.............**

பெண்ணின் தவவலிமையை இதை விட உயர்வாக யாரால் சொல்ல இயலும். ஆதலாலேயே லலிதா ச ஹஸ்திர நாமத்தில் ஒரு நாமம்.

**ஸ்வாதீன வல்லபா**

என்று இருக்கிறு. கணவனைத் தன் வயம் வைத்தவள் என்ற அழகிய பொருள் படக் கூறுகிறது இந்த நாமம். இந்தக் காலத்திற்கும் இது பொருத்தும் அல்லவா?

## பாசன்

ஒரு மிகச் சிறந்த நாடக ஆசிரியர். 13 நாடகங்களை இவர் எழுதியுள்ளார். இவர் நடை மிகவும் எளியது. நுட்பமான கருத்துகளைக் கூறுவதில் ஈடு இணையற்றவர்.

இவருடைய நாடகங்களில் சிறந்தது ஸ்வப்ன வாச வதத்தம் என்பதாகும். இதில் பத்மாவதி என்னும் அரச குமாரி, சான்றோரை சந்திக்கத் தபோவனத்திற்கு வருகிறாள். அங்குள்ள மக்களைப் பார்த்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறேன் வேண்டியவற்றைக் கேளுங்கள் என்பதை மிகவும் எளிமையுடன் கூறும் பாங்கினை கவி விவரிக்கிறார்.

**ஆத்மானுக்ரஹமிச்ச தீஹ நிருபஜா**
**தர்மாபிராம பிரியா**
**யத்யஸ்யாஸ்தி சமீப்ஸிதம் வதசி தத்**
**கஸ்யாத்ய கிம் தீயதாம்**

உங்களுக்கு வேண்டியதை அளிப்பதன் மூலம் ராஜகுமாரி அநிகிரஹம் செய்யப்பட்டவளாக உணர்கிறாள். என்ற இக்கருத்து A Good governance என்று சொல்லப்படும். நிர்வாக மேலாண்மைக்கு சிறந்த உதாரணமாகும் பொருளைக் கொடுத்து, அதனால் மகிழ்வடையுங்கள் என்ற உபநிஷதக் கருத்தும் இதில் அடக்கம்.

## மனு தர்ம சாஸ்திரம்

மனு தர்ம சாஸ்திரத்திலும் பெண்ணின் ஏற்றம் பலவாறு கூறப்படுகிறது. எங்கு ஸ்திரிகள் போற்றப்படுகிறார்களோ, அங்குத் தேவர்கள் மகிழ்வுடன் இருக்கிறார்கள் என்று சொல்லும் உயரிய பாங்கு உலகிலேயே வேறு எங்கும் காணக் கிடைக்காது. ஜகோல்லியட் (Jacolliot) என்ற ஆசிரியர் இந்த நூலை மிகவும் தொன்மையானது என்று கூறுவார். குருவிற்குரிய அனைத்து மரியாதைகளையும் குருபத்நிக்கும் செய்யவேண்டும் என்கிறது மனு தர்ம சாஸ்திரம். இல்லறத்திலும் வாழ்விலும் பெண்ணிற்கு பெரும் உயர்வை அளிப்பது இந்த நூல்.

## பகவத் கீதை

பகவத் கீதை 10 வது அத்தியாயத்தில் ஒரு நுட்பமான முறையில் பெண்டிருக்கு பெரும் ஏற்றம் சொல்லுகிறான் கீதாசாரியன். அந்த அத்தியாயம் விபூதி யோகம் எனப்படும். இதில் ஆண்டவன் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு திறனை வெளிப்படுத்தும் விபூதியாகத் தன்னைக் காட்டுகிறான். அஸ்திரம் தரித்தவர்களில் இராமனாகவும், சர்ப்பங்களில் வாசுகியாகவும், ஆதித்யர்களில் விஷ்ணு வாகவும், ஒளிபடைத்த கதிர்களை உடையவருக்கு சூரியனாகவும், நக்ஷத்திரங்களுக்கு சந்திரனாகவும் தன்னை வெளிப்படுத்திக்

கொள்கிறான். அதாவது அந்தந்த விஷயங்களில் மிகச் சிறந்தவனாக இறைவன் பிரகாசிக்கின்றான். ஆனால் பெண்டிர் எவரும் இந்த வரிசையில் விபூதியாகக் கூறப்படவில்லை. ஆனால் கண்ணன் எல்லாப் பெண்களிடத்திலும் தான் கீழ்க்கண்ட குணங்களை உடையவனாகச் சொல்லுகிறான்.

**கீர்தி ஸ்ரீர்வாக்ச நாரீணாம்**
**ஸ்மிருதிர் மேதா த்ருதி: க்ஷமா**

புகழ், லக்ஷ்மி கடாட்சம், வாக்கு, நினைவாற்றல், மேதை, திண்மை, பொருமை என்று ஏழு குணங்களுக்கு எல்லாப் பெண்டிரையுமே தன் விபூதியாகக் கூறுவான் ஏன் இந்த பட்ச பாதம் ஆண்களில் விஷ்ணு, சிவன், இராமன் போன்ற தெய்வங்களுக்குக் கூட ஒரே ஒரு குணத்தை வெளிப்பாடாகக் காட்டிய கண்ணன், தாய்க் குலத்திற்கு எத்தகைய ஏற்றம் சொல்லிவிட்டான்.

மஹாபாரதத்தில் வேறு பல இடங்களிலும் பெண்ணின் பெருமை கூறப்படுகிறது.

சமீபகாலத்தில் (17 ஆம் நூற்றாண்டு) எழுதப்பட்ட விஸ்வகுணாதர்ச சம்பூ போன்ற காவியங்களிலும் பெண்டிரின் உயரிய ஒழுக்கங்கள் ஏற்றம் சொல்லப் படுகின்றன.

பாரதப் பண்பாடு என்ற ஒரு தொடர் சங்கிலி ஏழு ஆயிரம் ஆண்டுகளாக பெண்மையைப் போற்றி வருகிறது. இது நம் சொத்து, சமஸ்கிருதம் மட்டுமன்றி தமிழிலும் பிற மொழிகளிலும் இதற்கு சான்றுகள் பல உள்ளன. இன்னும் அந்தச் சங்கிலி தொடர்வது, இந்த ஞான பூமியின் வெளிப்பாடு.

**நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்**
**னின்னருண் மழைபொழி யருணாசலா!**

*அருணாசலா! என்னை உனது தேஜோரூபமான ஞானாக்கினியால் சுட்டெரித்து, சாம்பலாகச் செய்வதற்கு முன்பு அதைத் தாங்கிக் கொள்ளும்படியாக, என்னுள்ளம் குளிரும் வண்ணம் உன்னருள் மழை பொழிந்தருள்வாய்!*

*— பகவான் ரமண மகரிஷிகள் அருளிய*
*அருணாசலா அக்ஷரமணமாலை, பாடல் 55*

அருணாசலனை வேண்டி

R. SELVARAJ
Contractor
P.Quilam Village & Post
Tandarampattu (TK)
Tiruvannamalai Dist

Advt

**வழுத்தலில் வாக்குச்ச வாய்க்குட் செபத்தில்**
**விழுப்பமா மானத முந்தீபற**
**விளம்புந் தியானமி துந்தீபற**

*இறைவனைப் போற்றித் துதித்து வழிபடுவதைவிட, ஜபம் செய்வது மேலானது. உரத்த குரலில் மந்திரத்தைச் சொல்லி ஜபம் செய்வதைக் காட்டிலும், வாய்க்குள்ளேயே மந்திரத்தை உச்சரித்து ஜபம் செய்வது சிறந்ததாகும். மானசீகமாக மனத்தினால் ஜபிப்பது அதைவிட உயர்வும் சிரேஷ்டமானதுமாகும். இதனையே தியானம் என்று சொல்லப்படுகிறது.*

*— பகவான் ரமண மகரிஷிகள் அருளிய*
*உபதேச உந்தியார், பாடல் 6*

# குரு கிருபையை வேண்டி

# Railone Projects Pvt. Ltd., HYDERABAD

Advt

# பாலக்காட்டில் ஓர் பலாக்கொத்து

**ஆகுரா**

விடிந்தும் விடியாத புலர்காலைப் பொழுது. கட்டிடத் தொழிலாளர்கள் மற்றும் பல உழைப்பாளிகள் தங்கள் பணிகளைத் துவங்க சாரிசாரியாகச் செல்லும் காட்சி. பாதசாரியாகச் செல்லும் இவர்கள் பாலக்காட்டில் உள்ள ரமணாச்ரமத்தைக் கடந்து செல்லும்போது சற்று அதன் வாயிலில் நின்று, பகவான் ரமணரின் திருவுருவை அங்கிருந்தபடியே வணங்கிச் செல்லும் காட்சி நம்மை அயர வைக்கிறது. இவர்கள் எந்த பக்தி இலக்கியமும் படிக்காதவர்கள், பகவானின் திருவுருவப் படம் ஒன்றைக் கண்டே மனமுருகி நிற்பவர்கள். நாமும் அங்கிருந்து பகவானின் திருவுருவை அந்த அதிகாலையில் பார்க்கும்போது நினைவுகள் பின்னோக்கிச் செல்கிறது.

பகவானின் இத்திருவுருவப் படம் எடுத்தவர் வெல்லிங் என்ற வெளிநாட்டு பக்தர். அவர் இப்படத்தை எடுக்கும் பொழுது பகவான் ‘‘வெளிச்சம் போதுமா?’’ என்று கேட்க, அதற்கு வெல்லிங், ‘‘பகவானே! நீங்களே நிரந்தர ஒளி, தங்களுக்கெதற்கு வெளிச்சம்’’ என்றாராம். இன்று ரமணீய விக்ஞான ஆச்ரமம் பாலக்காட்டில் அதன் நுழைவாயிலில் இருந்து காணும்போதே ஒளிரும் பகவானின் திருவுருவப் படம் அதை நிரூபிக்கும் வண்ணம் உள்ளது. சகலமும் விழுங்கும் கதிரொளி இனமன சலசம் அலர்த்தியிடும் அருணாசலா என்னும் அட்சரமணமாலை வரிகள் நமக்கு நினைவுக்கு வருகின்றன.



விஞ்ஞான ரமணீயம் ஆச்ரமம் கொப்பம் என்னும் பாலக்காட்டின் பிரதான பகுதியில் புதிய பொலிவுடன் வருவோர்க்கெல்லாம் பசியாற்றி மனமொடுங்கும் கலை வளரும் இடம். 1947களில் திரு. சுரேஷானந்தா என்னும் ரமண அன்பரால் வாடகை இடத்தில் விஞ்ஞான ரமணீயம் நூலக மாகத் துவக்கப்பட்டது. சுரேஷானந்தா மற்றும் பல அன்பர்களின் முயற்சியால் இப்பொழுதுள்ள இடம் சொந்தமாக வாங்கப்பட்டு ஆச்ரமம் உருவானது. இதற்காக செம்பை வைத்தியநாத பாகவதர் மற்றும் திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இசைக் கச்சேரிகள் நடத்தப்பெற்றதாக அறிகிறோம். சுமார் 35 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு மதியம் அன்னதானம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுரேஷானந்தாவிற்குப் பிறகு அன்பர்களின் விருப்பத்திற்கு இணங்க திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியதை ஆனபின் பழைய கட்டிடத்திற்குப் பதிலாகப் புதிய கட்டிடம் கேரளத்தின் கலாச்சாரத்திற்குப் பொருந்தும் வகையில் பெரிய அளவில் கட்டப்பட்டு தியான மண்டபம், தங்கும் அறைகள் என விரிவாக்கப்பட்டுள்ளது. அன்னதானத் திட்டமும் பெருமளவில் விரிவாக்கம் பெற்றுள்ளது.

ஆச்ரமத்தின் முகப்பு மற்றும் கட்டுமானம் கேரள மண்ணிற்கே உரிய பொலிவுடன் திகழ்கிறது. நுழைவு வாயிலில் அலுவலகம், நூலகம், கடந்தபின் தியான மண்டபம். உள்ளே நாம் முன்பு விளக்கிய பகவானின் ஒளிரும் புகைப்படம் பூஜைக்குரியதாக கருவறையில்



வைக்கப்பட்டுள்ளது. அதற்கு இடப்புறமாக சுரேஷானந்தா அவர்களின் சமாதி அறை அமைந்துள்ளது. இவற்றுக்குப் பின்புறம் பாகசாலை போஜனசாலை மற்றும் தங்கும் அறைகள் உள்ளன.

மிகுந்த பொருட்செலவில் இவ்வாச்ரமத்தின் இன்றைய பொலிவான தோற்றம் உருவாக திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமம் பெருமளவில் உதவியுள்ளது. தற்காலம் இவ்வாச்ரமம் திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமத்தினரால், பாலக்காட்டு பக்தர்களின் துணையுடன் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

விடியற்காலை 5 மணியளவில் இங்கு நிரந்தரமாகத் தங்கும் ரமண அன்பர்கள் இந்த ஆச்ரமத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தி பூஜை ஆராதனைகளை செய்கின்றனர். காலை 9.30 மணி அளவில் அன்பர்களுக்கு கஞ்சி வழங்கப்படுகிறது. மதியம் நாராயண சேவையும்,

பிக்ஷையும் நடைபெறுகிறது. இங்கு உணவுக்கென்று வருபவர், பிரசாதமாக உண்ண வருபவர்கள் என பலதரப்பட்ட மனிதர்களின் பசியை ஆற்றும் இவ்வேள்வி தொடர்ந்து நடைபெறுவது இத்தலத்தின் மேன்மையாகும்.

மாலை வேளைகளில் மீண்டும் பூஜை ஆராதனைகள் பாராயணம் என தின நிகழ்வுகள், மற்றும் ஆன்மீக வகுப்புக்கள் என ஆன்மீகம் தழைக்கும் இடமாக விளங்குகிறது. இரவு மீண்டும் கஞ்சி வழங்கப்படுகிறது.

வழிப்போக்கர்களாக வரும் சாதுக்கள், சாதகர்கள் எனப் பலரும் மன அமைதியுடன் இளைப்பாறவும், ஆன்மீக சாதனைகள் மேற்கொள்ளவும் பாலக்காட்டில் அமைந்துள்ள இவ்வாச்ரமம் இன்று ஆலமரமாக தழைத்தோங்கியுள்ளது என்றால் அது மிகையல்ல. தொடர்பு கொள்ள: **0491-2545499**



*சுவாமி சுரேஷானந்தா சமாதி, பாலக்காடு*

# சுவாமி சுரேஷானந்தா — 'வக்கீல் சாமி'

*விஞ்ஞான ரமணீயம் என்று அழைக்கப்படும் பாலக்காடு ஸ்ரீ ரமணாச்ரமத்தை நிறுவிய சுவாமி சுரேஷானந்தா அவர்கள் பாலக்காட்டிற்குக் கிழக்கே ராமசேரி என்ற சிறிய ஊரில் எளிமையான நாயர் குடும்பத்தில் தாமோதரன் நாயர் என்ற நாமகரணத்துடன் பிறந்தவர். இவர் திருச்சியில் பட்டம் பெற்று பின்னர் சென்னையில் சட்டம் பயின்றவர். பாலக்காடு பார்கவுன்சிலில் வழக்கறிஞராக மெம்பராக இருந்து வழக்கறிஞர் தொழிலை செய்து வந்தவர். ஆரம்பத்தில் ஓர் கிரகஸ்தராக இருந்த இவர் பிற்காலத்தில் ஆன்மிக நாட்டம் கொண்டவராகி ரிஷிகேஷ் வாசிஸ்ட குகை சுவாமி புருஷோத்தமானந்தாவிடம் கன்னியா குமரியில் சந்நியாச தீட்சை பெற்றுக் கொண்டார். தனது ஆன்மிக நாட்டத்தால் பல்வேறு ஆச்ரமங்களுக்கு சென்று வந்தவர் ஒருமுறை காஞ்சங்காடு ஆனந்தாச்ரமத்தை அடைந்தபோது அங்கு ஓர் அன்பரால் தூண்டப்பட்டு (1947) திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமம் வந்தடைந்தார். பகவான் ரமணரை சந்திக்கும்முன் அவருள் இருந்த பல ஆன்மீக சந்தேகங்களும் கேள்விகளும் பகவான் சந்நிதியில் அமர்ந்த மாத்திரத்தில் மறைந்து விட்டன. அந்த முதல் சந்திப்பில் சுமார் இரண்டு மணி நேரம் ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்த அவரது உள்ளக் கிடக்கையே பிற்காலத்தில் அவரை பகவானின் ஆத்மார்த்த சீடராக்கியது. அதன் பின்னர் அவர் பகவானின் பல்வேறு நூல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்தார். இவர் சமஸ்கிருதம் மற்றும் ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்றிருந்தது இவ்வான்மிகப் பணிக்கு பெரும் பலமாக அமைந்தது. பகவானால் இவர் 'வக்கீல் சாமி' என்றே அழைக்கப்படுவதுண்டு.*

*பகவானை சந்தித்த பின்னர் பாலக்காடு சென்ற இவர் அங்கு 1947களில் சிறிய ஆன்மிக நூலகமாக விஞ்ஞான ரமணீயத்தை வாடகைக் கட்டிடத்தில் துவக்கினார். பகவானுக்காக ஒரு நிரந்தர விலாசம் கொண்ட அமைப்பை உருவாக்க பெரும்*

முயற்சி எடுத்த இவருக்கு பல அன்பர்களின் உதவி கிடைத்தது. ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் பசியாற அன்னதானமும் ஆன்மிக அன்பர்களுக்கு பல்வேறு கீதை மற்றும் வேதவகுப்புகள் நடத்தியும் தொண்டாற்றினார். 3.1.1954 அன்று இவ்வாச்ரமத்தின் தியான மண்டபத்தை அன்றைய சென்னை கவர்னர் பிரகாசம் அவர்களைக் கொண்டு துவக்கி வைத்தார். இந்த ஆச்ரமத்திற்கு சின்மயானந்தா, மகரிஷி மகேஷ்யோகி, ஸ்ரீ ஞானானந்த சரஸ்வதி மற்றும் சத்ய சாய் பாபா என பல்வேறு ஆன்மிகவாதிகள் வருகை புரிந்த சிறப்பு நிகழ்ச்சிகள் பெற்றதாக அறிகிறோம். சுவாமி சுரேஷானந்தா அவர்கள் சிறந்த கவியாவார். பகவானைப் பற்றிய பல கவிதை நூல்கள் இயற்றியுள்ளார். அக்காலத்து மலையாள கவிஞரான ‘வள்ளத் தோள்’ போன்றவர்களின் தொடர்பு கொண்டவராக இருந்தார்.

இவர் பகவான்பால் கொண்ட அதீத பக்திக்கு எடுத்துக்காட்டாக அமைந்த நிகழ்வு ஒன்று. இவர் மறைவிற்குப்பின் இவ்வாச்ரமத்தில் அவரது சமாதியின்மேல் எவ்வித லிங்கமும் ஆராதனைக்காக அமைக்கப்படக் கூடாது என கண்டிப்பாக உத்திரவிட்டிருந்தார். இவ்வாச்ரமத்தில் தெய்வமாக கொண்டாடப்பட வேண்டிய ஒரே சந்நிதி பகவானின் சந்நிதியே என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். இவர் 20..11.1983 கார்த்திகை தீபத் திருநாளன்று இரவு பல அன்பர்களுடன் ஆன்மிக சத்சங்கம் கூடியிருந்தபோது தனது பூதவுடலை நீத்து பகவானது பாதங்களை அடைந்தார். இவரது சமாதி இவ்வாச்ரமத்தில் அமைந்துள்ளது.

## ரமண மையங்களுக்கு ஓர் வேண்டுகோள்

*ரமண மையங்களில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் ரமணோதயத்தில் இடம்பெற, தங்கள் செய்தித் தொகுப்புகளை படங்களுடன் அனுப்பினால் பிரசுரிக்கப்படும். மின்னஞ்சலாகவோ அல்லது அஞ்சலாகவோ அனுப்பவும்.*

# குரு நமஸ்காரம்

ஒரு சமயம் பகவானது அணுக்கத் தொண்டரான குஞ்சு சுவாமி யாத்திரை சென்றபோது கோவிலூர் மடத்திற்குச் சென்று அங்குச் சில நாட்கள் தங்கியபோது மடாதிபதி பகவானைப் பற்றி அன்பாக விசாரித்தார். அப்போது அங்கு வந்த பணக்கார செட்டியார் ஒருவர் மடாதிபதிக்குக் கீழே விழுந்து நமஸ்காரம் செய்து விபூதி வாங்கிக் கொண்டார்.

குஞ்சு சுவாமி ஆச்ரமம் திரும்பி வந்தபோது பகவான் அங்கு நடந்ததை எல்லாம் கேட்டார். அப்போது குஞ்சு சுவாமி அங்கு நடந்ததையெல்லாம் கூறி செல்வந்தர் வந்து நமஸ்காரம் செய்ததைக் கூறினார். அப்போது பகவான், ''நீ நமஸ்காரம் செய்தாயா?' என்று கேட்டார். குஞ்சு சுவாமி தயங்கிக் கொண்டே, 'பகவானை நமஸ்கரித்த பிறகு வேறு ஒருவருக்கு எப்படிச் செய்ய முடியும். ஆகையால்தான் செய்யவில்லை' என்றார். அதற்கு பகவான் அவரைப் பார்த்து, ''பகவானை ரொம்பத் தெரிந்தவன், புத்திசாலி, உன்னுடைய பகவான் இந்தக் கட்டிடத்திற்குள் சோபாவில் ஆறடி சரீரத்திற்குள் மட்டுந்தான் இருக்கிறார். வேறு எங்கும் இல்லை போலும். அப்படி ஏக பக்தியுள்ளவன் மற்ற இடத்திற்குப் போகக் கூடாது. அப்படிப் போனால் சம்பிரதாயப்படி நடக்கத் தெரிந்திருக்க வேண்டும். எங்கு எவரை யார் வணங்கினால் அந்த வணக்கம் அவர்களைப் போய்ச் சேரும். அதுதான் முறை'' என்று அறிவுறுத்தினார். குஞ்சு சுவாமியும் தன் தவறை உணர்ந்து அன்றிலிருந்து யாரை வணங்கினாலும் பகவானை நினைத்து வணங்குவது வழக்கம்.

# செய்திகள்

## ஸ்ரீ ரமணாச்ரம செய்திகள்



*கடந்த இரு ஆண்டுகளின் தொடர்ச்சியாக இவ்வாண்டும் நொச்சூர் வேங்கடராமன் அவர்கள் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் பகவான் ரமண மகரிஷிகள் அருளிய உள்ளது நாற்பதிற்கு விளக்கவுரை அளித்து சொற்பொழிவாற்றினார்.*

*26.6.2011 முதல் 3.7.2011 வரை நடைபெற்ற இச் சொற்பொழிவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பயனுற்றனர்.*

## ஓர் நற்செய்தி

*வெளியூர் மற்றும் வெளிநாட்டு அன்பர்களின் நீண்டநாள் அவாவை நிறைவு செய்யும் வண்ணம் கீழ்க்கண்ட இணையதள முகவரிகளில் ரமணாச்ரமம் வெளியீடுகளை ஆன்லைன் மூலம் பெறலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இந்தியாவில் உள்ள அன்பர்களுக்கு*

http://www.sriramanamaharshi.org/bookstallsales/

*வெளிநாட்டு அன்பர்களுக்கு*

http://www.arunachala.org/bookstore/

## ஆச்ரம நிகழ்வுகள் அன்றே அப்பொழுதே

*ஆச்ரம முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் நேரடியாக அவ்வப்பொழுதே ஒளிபரப்பப்படுகின்றன. இதற்கான அறிவிப்பு ஆச்ரம இணையதளத்தில் முன்னதாக அவ்வப்பொழுது வெளியிடப்படுகின்றது. இதனை அன்பர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கான இணையதளம்* www.sriramanamaharshi.org

## அதிருத்ர மகாயக்ஞம்

*ரமண அன்பர் திரு. ஐயப்பன் அவர்கள் அண்ணாமலைச் சாரலில் அமைந்துள்ள ஓயா மடத்தை மையமாகக் கொண்டு ஜூன் 18 முதல் 28 வரை 11 நாட்களுக்கு அனைத்து அண்ணாமலை அன்பர்களுக்காக இவ்வையம் உய்ய வேண்டி ஓர் மகாப் பெரிய அதிருத்ர மகாயஞ்ஞத்தை பொறுப்பேற்று முன்னின்று வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.*

*இந்த மகா யக்ஞத்தில் 160 க்கும் மேற்பட்ட வேத பண்டிதர்கள், கனபாடிகள் என பெருவகையில் கலந்து கொண்டு அனைத்து வேத மந்திரங்களும் அண்ணாமலையில் எதிரொலிக்க ஒவ்வொருநாளும் ஸ்ரீருத்ரத்தை 14,641 முறை பாராயணம்*



*செய்தனர். இத்துடன் சண்டி பாராயண வகையில் தேவிமாகாத்மியமும் இணையாக பாராயணம் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவிற்கு முத்தாய்ப்பாக இறுதிநாளன்று இங்கு பூஜிக்கப்பட்ட 136 புனித கலசங்களை ஊர்வலமாக ஸ்ரீரமணாச்ரமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பகவான் மற்றும் தாயார் சந்நிதிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தியபின் இவ்விழா நிறைவுற்றது.*

## ரமண ஆராதனை மற்றும் தாயார் மகாபூஜை

## திருவண்ணாமலை

*பகவான் ரமண மகரிஷிகளின் 61வது ஆராதனை விழா 30/4/2011 அன்று திருவண்ணாமலை ரமணாச்ரமத்தில் வழக்கமான முறையில் மிகச் சிறப்பாக திரளான பக்தர்கள் கலந்துகொள்ள அபிஷேக ஆராதனை மற்றும் சிறப்பு அன்னதானங்களுடன் நடைபெற்றது.*

*அன்னை அழகம்மையின் மகாபூஜை 26/5/2011 அன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் எப்பொழுதும் போல் சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்விழாக்கள் மதுரை மற்றும் திருச்சுழியிலும் சிறப்பாக நடைபெற்றன.*



*முருகனார் மந்திரம், இராமநாதபுரம்*

## இராமநாதபுரம்

*30/4/2011 அன்று பகவானின் 61 வது ஆராதனை விழா மதுரை விவேகானந்த கல்லூரி சுவாமி ஸ்ரீமத் பரமானந்த சுவாமிகள் அவர்கள் முன்னிலையில் பேராசிரியர் திரு. ராமசாமி அவர்கள் சிறப்புரையாற்ற விழா சிறப்பாக நடந்தேறியது. விழாவில் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் செய்த 25 பள்ளி மாணவர்களுக்கு பாண்டிச்சேரி ரமண கேந்திரம் சார்பில் குத்து விளக்கும் ஆங்கில அகராதியும் வழங்கப்பட்டன.*

*26/5/2011 அன்று தாயார் தினமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

## சென்னை, ரமண கேந்திரம்

*30.4.2011 அன்று பகவானின் 61 வது ஆராதனை விழா சென்னை ரமண கேந்திரத்தில் காலை துவங்கி மஹன்யாச ஏகாதச ருத்ர ஜபம், சஹஸ்ரநாம அர்ச்சனை, உள்ளது நாற்பது மற்றும் அக்ஷரமணமாலை பாராயணங்களுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தீபாராதனை முடிந்தவுடன் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில் ஆண்டவன் பிச்சை பஜனை மண்டலியின் ரமண பஜன் மற்றும் திருமதி. சியாமளா ராமச்சந்திரன் அவர்களின் கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன. இறுதியாக இரவு ரமண பகவானின் திருவுருவம் மயிலை மாடவீதிகளில் திருவீதிவுலாவாக கொண்டு செல்லப்பட்டது. இவ்விழாவின் விரிவாக்கமாக 1.5.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. குமாரி சிந்துஜா ரமண பக்திப் பாடல்களைப் பாட திரு. வேங்கடகிருஷ்ணன் அவர்கள் துவக்கவுரை ஆற்றி சுவாமி விமுர்தானந்தாஜி அவர்கள் விழாவை துவக்கிவைத்தார். பின்னர் திரு. தியாகராஜன் டாக்டர் ராம்மோகன் திரு. வ.வெ.சு மற்றும் சுவாமி தியாகேசானந்தா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

*26.5.2011 அன்று அன்னை அழகம்மையின் மகாபூஜை நடைபெற்றது.*

## சென்னை நங்கைநல்லூர்

*ரமண சத்சங்கம் 8.5.2011 அன்று ஸ்ரீவரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் 61வது ஆராதனை விழா கொண்டாடப்பட்டது. திரு. தியாகராஜன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் தீபாராதனை நடந்தபின் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## சரோஜா கிருஷ்ணன்



*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் பழம்பெரும் பக்தர்களில் ஒருவரான திருமதி சரோஜா கிருஷ்ணன் அவர்கள் தனது 90வது வயதில் வயதில் 30/6/2011 அன்று பகவான் திருவடியடைந்தார். இவர் திரு. ஹரிஹர ஐயர் திருமதி. கௌரி அம்மாள் தம்பதிகளுக்கு 23/6/1922 அன்று மகளாக அவதரித்தார். பகவான் விரூபாக்ஷ குகையில் வாசம் செய்த காலந்தொட்டே பகவானின் சீரிய பக்தராக இருந்தவந்த திரு. நாராயண ஐயர் அவர்களின் பேத்தியாவார் மற்றும் சேலம் ராஜ கோபாலய்யர் இவரின் சிற்றப்பா என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆக பல தலைமுறைகளாக இவரது குடும்பம் பகவானையே தங்களது ஆத்ம குருவாக ஏற்று தொண்டாற்றி வந்துள்ளது. இவர் சிறுவயது முதலே பகவானை தரிசித்து அவரது கருணைப் பார்வையில் படும் பாக்கியம் பெற்றவர். பகவான் பலமுறை இவரை 'நமது சரோஜா' என்று அன்புடன் குறிப்பிட்டதுண்டு. பகவானைப் பற்றிய பல ஆங்கில நூல்களை இவர் தமிழாக்கம் செய்துள்ளார். அன்னாரைப் பிரிந்து வாடும் மருமகள் கிரிஜா நாராயணன், பேரன்கள் ஆனந்த், அருண் மற்றும் குடும்பத்தினருக்கு ரமணோதயம் தங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

**ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தெனை**
**யாளுவ துன்கட னருணாசலா!**

*அருணாசலா! அன்பிற் சிறந்த தாயைப்போல, உன்னைக் கதியாக நாடிவந்த எனக்கு உனக்கியல்பாகவேயுள்ள அருளைத் தந்து, உன்னையே சரணடைந்த என்னை நீ அருள் பாலித்து ஆளுவது அம்மையப்பனாகிய உனக்குக் கடமையேயாகும்.*

*— பகவான் ரமண மகரிஷிகள் அருளிய*
*அருணாசலா அக்ஷரமணமாலை, பாடல் 14*


# பகவான் அருள் வேண்டி
# பதம் பணியும்

L. Vijayalakshmi
No. 1/A, Rajamanikkam St.,
West Shanmugapuram Colony,
Villupuram - 605 602

Advt

***அண்ணா மலையா யடியேனை***
***யாண்ட வன்றே யாவியுடற்***
***கொண்டா யெனக்கோர் குறையுண்டோ***
***குறையுங் குணமு நீயல்லா***
***லெண்ணே னிவற்றை யென்னுயிரே***
***யெண்ண மெதுவோ வதுசெய்வாய்***
***கண்ணே யுன்றன் கழலிணையிற்***
***காதற் பெருக்கே தருவாயே.***

*தன்னை முழுமையாக இறையருளுக்கு ஒப்படைத்தபின் தனக்கென்று ஓர் குறையோ குணமோ தனித்து இயங்காது. எது நேர்ந்தாலும் அது அவனால் உண்டாக்கப்பட்டதே யாகும் என்பதை பகவான் குறையும் குணமும் நீயல்லால் என்று சுட்டிக் காட்டுகிறார். எப்போதும் ஏதோ குறை சொல்லுவதே குணமாகவுள்ள ஜிவபோதத்தை முற்றும் அருணாசலன் அழித்து விட்டதனால் குறையோ குணமோ நீதான் என்பது பொருள்.*

*— பகவான் ரமண மகரிஷிகள் அருளிய*
*அருணாசலா நவமணிமாலை, பாடல் 7*

# அருணாசலனை வேண்டி

# B.Rajagopalan
# Lalgudi

Advt

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **கூடுவாஞ்சேரி** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **பெசன்ட் நகர், அடையார்** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **குரோம்பேட்டை** K.L. சங்கர் | .......... | 22233432 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **அண்ணாநகர்** U.V. பானு | .......... | 26287809 |
| **புதுச்சேரி** M.S. சந்திரசேகரன் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **பொள்ளாச்சி** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.